# சாளரம்

இளையோர் திங்கள் இதழ்

செப்ரெம்பர் - ஒக்ரோபர்

விலை - 15.00





எதிர்காலத்தின் சிற்பிகளே
எழுந்து வருக!

## தொழில் நுட்பத்தின் வளர்ச்சி

பொது அறிவைப் பெற்றால்
முழு மனிதர் ஆகலாம்

கண்ணைக் கவரும் வண்ண வண்ண
மேலாடைகளின் இருப்பிடம்

சோதி புடவையகம்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற நாகரிக ஆடைவகைகளுக்கு

இன்றே விரைந்து வாரீர்

# சோதி புடவையகம்



உங்கள் விருப்பங்களின் மையம் இது
வேறெங்கும் செல்லத்தேவையில்லை

- தரம்
- நம்பிக்கை
- நாணயம்
- நியாயவிலை

# சோதி புடவையகம்

இல. 14, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சாளரம் கதவு 4 (29) காற்றலை 13

# நம்பிக்கை

சனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. பொதுவாக அனைவரும் எதிர்பார்த்ததுபோல் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவே பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்று சனாதிபதியாகியுள்ளார்.

கடந்த பதினேழு வருட ஐக்கிய தேசியக் கட்சி அரசின் ஆட்சியினால் மக்கள் அனுபவித்த துயரங்களே சந்திரிகாவின் வெற்றிக்கு வழிசமைத்தது எனலாம்.

கோரமாக தலைவிரித்தாடிய அரச பயங்கரவாதமும், ஊழல் நடவடிக்கைகளும் சிங்கள மற்றும் சிறுபான்மை மக்களின் வெறுப்புக்குள்ளாகின.

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் மீதான வெறுப்புணர்வுகளின் வெளிப்பாடே பொதுஜன ஐக்கிய முன்னணியின் இன்றைய வெற்றி!

இப்போது புதிய சனாதிபதியின் நல்லெண்ண நடவடிக்கைகளை தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் தீர்வுக்கான புதிய அரசின நகர்வுகளை நுட்பமாக அவதானித்துக்கொண்டும் உள்ளனர்.

புதிய சனாதிபதியான சந்திரிகாவின் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் இனவாதப் போக்கற்றவர்கள் என்று கூறிவிட முடியாது. பாதுகாப்புப் படையினரின் மன உணர்வுகளை முற்றுமுழுதாக சந்திரிகாவினால் மாற்றிவிட இயலாது. சிங்களவர்களில் ஒரு பகுதியினரின் இனவாதத்தை முறியடிப்பது மிகவும் கடினமான காரியம்.

அத்துடன், இன்று எந்தவொரு அரசியல்வாதியும் பதவிக்காக தனது 'சுயத்தை' இழந்துவிடுகின்ற தன்மைகளைத்தான் அதிகம் பார்க்கிறோம். இதிலிருந்து விதிவிலக்காக சந்திரிகாவின் 'அரசியல் இருப்பு' நிலைகொள்ளுமா?

பல ஊழல்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளவரான தொண்டமானுக்கு தேர்தலின் முன்பே அமைச்சர் பதவி வழங்கப்பட்டது.

ஊழல்களைக் களைவதான சந்திரிகாவின் நடவடிக்கைகளின் இடையே இடம்பெற்ற 'நெருடலான' ஒரு சம்பவமாக இதனை உதாரணம் காட்டலாம்.

வாக்கு வேட்டைக்காக வாக்குறுதிகள் மீறப்படாது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் அரசியல்வாதிகளிடம் இல்லை.

சந்திரிகாவின் தனிப்பட்ட குணநலன்கள் மீதான மதிப்பு, நம்பிக்கை என்பது வேறு. தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கமைய சிங்கள அரசினால் தீர்த்து வைக்கப்படும் என்கிற நம்பிக்கை வேறு. இதனைப் பிரித்துப் பார்க்க வேண்டியது தமிழ் மக்களின் பொறுப்புள்ள கடமையாகும்.

நம்பிக்கை கொள்வோம் அது தவறல்ல. நம்பிக்கை என்பது மனதளவில் ஒருவித 'சரணடைவாக' இல்லாமல் பார்த்துக் கொள்வோம்.

> ஒரு திடமான, தனித்துவமான தேசிய ஆளுமையைக் கொண்ட மக்களாக தமிழீழ மக்கள் வளர்ச்சியும் முதிர்ச்சியும் கண்டிருக்கிறார்கள். இரத்தப் புரட்சியாக கட்டவிழ்ந்த நீண்ட கடினமான போராட்ட வரலாறும், அதனால் உருவான நிலைதளராத இலட்சிய உறுதியும், நாட்டுப்பற்றும் எமது மக்களை தேசிய ஆளுமை கொண்ட மக்கள் இனமாக மாற்றியமைத்திருக்கிறது.
>
> தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்

## இந்த இதழில்


- மாவீரர்நாள்
- T 55 பிரதான சமர் டாங்கி
- தந்தையின் கையில் சிலுவைச் சிலுவி பிள்ளையின் தோளில் சிலுவைப்பாரம்
- நிலாமுற்றம்
- விறகிற்காக யாழ் மாவட்டத்தில் காடுகள் அழிப்பும் நீண்டகால பாதிப்பும் தீர்வுகளும்
- மார்க் அவர்களுடன் ஒரு நேர்காணல்
- இரத்தச்சோகை நோய் கற்கும் திறனை பாதிக்கும்
- தேசம் விடுதலை பெறுவது உங்கள் கையில்
- அறிவுலகம்
- அறிவுலகம் கேள்வி - பதில்
- அரும்புகள்
- தெறிப்பு
- விளையாட்டு
- சிறுவர் போசாக்கு பூங்கா விளையாட்டு விழா
- பகலவன் பதில்கள்
- ஆங்கிலம் கற்போம்
- பொது அறிவுப்போட்டி

# தமிழ் மக்களின் புனிதமான நிகழ்வு

# மாவீரர் நாள்

எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது தமிழீழத்தின் விடிவிற்காகவும், உயர்வுக்காகவும் உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாக்கிவிட்டவர்களினதும் எமது மூச்சுடன் கலந்துவிட்டவர்களினதுமாகிய நினைவுநாளாகும்.

தேசவிடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தும் எதிரி பாசறையை வெடிகுண்டு கொண்டு தகர்த்தும் சத்திய வேள்வியில் நித்தமும் வேங்கை கொடியது பறந்திட உயிரினை ஈந்து உடலை உரமிட்டு செங்குருதியால் வரலாறு படைத்து தமிழீழ மண்ணெங்கும் நினைவுச் சிலைகளாய், ஓவியமாய் வெள்ளை மலரேந்திய வேதங்களாய் ஈழ மண்ணில் புது விதையாய் விடுதலையின் தீச்சுடராக தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே மாவீரராவர்.

தமிழ் இன விடிவிற்காய்த் தம்மை ஈந்தவர்கள், தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீக்களை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேச மக்களின் பாசப் பிணைப்புகளுக்காக தமது பாசங்களைப் பொசுக்கியவர்கள். பள்ளிப் பராயத்தை பள்ளித்தோழருக்காய் பறிகொடுத்தவர்கள். ஊரெல்லாம் உறங்கும் வேளை உறக்கமின்றி விழித்தவர்கள். எல்லை சுற்றி வேலிச் சிலையாய் நின்றவர்கள். தமது மக்களுக்காய் கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

தேச விடுதலைக்காய் தம்மைத் தற்கொடையாக்கிய மாவீரர்களுக்கு தமிழீழ மண்ணில் மாவீரர் நாள் உறுதிப்பாடாயிற்று. இவ்வெழுச்சி நாளே தமிழீழத்தின் தேசிய நாளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. விடுதலைப்புலி வீரர்களில் முதலாவதாக வீரச்சாவெய்திய மாவீரர் சத்தியநாதனின் (சங்கர்) நினைவு நாளை நவம்பர் 27 ஐ தமிழீழ தேசம் மாவீரர் நாளாகப் பிரகடனம் செய்துள்ளது. வருடம் தோறும் இப்புனித நாளினை உணர்வு பூர்வமாகக் கொண்டாடுகிறது நினைவு கூருகிறது.

மாவீரர் நாளானது தமிழீழமெங்கும் மக்களால் முன்னெடுத்துக் கொண்டாடப்படுகின்ற, எழுச்சி மிக்கநாள். இந்நிகழ்வானது நவம்பர் 21இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. மக்கள் மனங்களில் இம்மாவீரர்கள் எந்தளவுக்கு நிறைந்திருக்கின்றார்கள் என்பதை இவர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளிலிருந்து காணக்கூடியதாகவிருக்கும். பெருவீதிகள், ஒழுங்கைகள், மாவீரர் தூபிகள், படம்வைத்த இடங்கள், பொது நிறுவனங்கள் புனித மயமாக்கப்பட்டு விடும். தமிழீழநாடுபுதுப்பொலிவுடன் திகழும்.

தற்கொடையாகத்தில் தினம் தினம் உதிரும் மாவீரர்களை ஒரே நாளில் ஒரே நேரத்தில் தமிழீழ மக்கள் மனங்களில் பதித்து, இவர்களின் கனவுகள், இலட்சியங்கள் ஈடேற உறுதி எடுக்கின்ற ஒரு நாள் இம் மாவீரர் நாளாகும்.

உங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளும், எமது சக போராளிகளுமான இம் மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகவும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக எம்மை நினைக்க வைத்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இத் தெய்வங்களை இம்மண்ணிற்காய் உவந்தளித்த, பெற்றோரைக் கௌரவித்து, இம் மண்ணில் உரிமையுடன் கால் பதித்து நிற்கின்ற ஒரு பெரு நிலையை மக்களும் உலகமும், நோக்குகின்ற ஒரு புனிதத் தன்மை வாய்ந்த தேசிய நாளாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழி நடாத்தும் உந்து சக்தியாக, என்றும் இருக்கும். மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது, ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டுமக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியதாகவும் வளர்ந்துவரவேண்டும்.


இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும், உணர்வு பூர்வமாகவும், புனிதத்தன்மையுடனும் நிலை நாட்டுவதற்காக எமது தமிழீழ மக்கள் அனைவரினது மனமுவந்த ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

**"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"**

நன்றி

தமிழீழ மாவீரர் பணிமனை.

# T55, பிரதான சமர்டாங்கி



T55 பிரதான சமர்டாங்கி, 1952 காலப்பகுதியில் சோவியத்தின் இராணுவத்தின் சேவையிலிருந்து T54 பிரதான சமர் டாங்கிகளை பிரதியீடு செய்வதற்கென உற்பத்தி செய்யப்பட்டது. 1958 ஆம் ஆண்டிலேயே இது சோவியத் படையினால் பயன்படுத்தப்பட்ட போதும் 1961 ஆம் ஆண்டு மொஸ்கோவில் நடைபெற்ற சுதந்திரதின அணிவகுப்பிலேயே முதன் முதலாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பின்னரே இந்த டாங்கிகளை ஒத்த ரகங்களை செக்கோஸ்லோவாக்கியாவும் சீனாவும் தயாரிக்க ஆரம்பித்தன. செக்கோஸ்லோவாக்கியத் தயாரிப்பும் T55 பிரதான சமர் டாங்கி என்றே அழைக்கப்பட்டது. செக்கோஸ்லோவாக்கியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட T55சமர் டாங்கிகளையே சிறீலங்கா இராணுவம் பயன் படுத்திவருகின்றது.

காய்ச்சியடித்து ஒட்டவைக்கப்பட்ட கவச உடற்பகுதியைக் கொண்டதும் ஒரு 100மி.மீ குழல் விட்டத்தைக்கொண்ட D10 எனப்படும் பீரங்கியை பிரதான போர்த்தளபாடமாகக் கொண்டதுமான இந்த டாங்கியின் முன்புற இடதுபுறத்தில் சாரதியும், நடுப்பகுதியில் இடதுபுறமாக பீரங்கி சுடுபவரும், வலது புறமாக பீரங்கிக்கு குண்டேற்றுபவரும் பானை வடிவமாகக் காணப்படும் சுழல் மேடைக்கு உள்ளே இருக்க சுழல்மேடையின் இடதுபுறமாக மேற்பகுதியில் டாங்கியின் கொமாண்டர் இருப்பார். பின்பகுதியிலேயே இந்த டாங்கியை இயக்கும் 580hp இயந்திரம் அமைந்துள்ளது. பிரதான பீரங்கியுடன் ஒரே அச்சில் அடக்கக்கூடியதாக 7.62மி.மீx54R ரவைகளைச் சுடக்கூடிய PKT எனும் இயந்திரத்துப்பாக்கியொன்றும், விமான எதிர்ப்புப்பாதுகாப்பிற்கென 12.7மி.மீx108 ரவைகளைச் சுடக்கூடிய Dshkm எனப்படும் இயந்திரத் துப்பாக்கியொன்றும் இதில்பொருத்தப்பட்டுள்ளன. பிரதான பீரங்கிக்கென 43 குண்டுகளையும் ஒரே அச்சில் சுடும் துப்பாக்கிக்கென 3600 ரவைகளையும், விமான எதிர்ப்புத் துப்பாக்கிக்கென 500 ரவைகளையும் இந்த டாங்கியில் கொண்டுவர முடியும்.

*கடந்த செப்ரம்பர் இதழில்" கேணல் கிட்டு நினைவுப் பூங்காவில்" காட்சிக்கு வைக்கப் பட்டுள்ள பாரிய கனரக வாகனம், 'செயின் டோசர்' என்று குறிப்பிடப்பட்டது உண்மையில், டாங்கி என்பதே. ஊடுகடத்து உருக்கினால் ஆன, சுழல் பட்டிகள் இணைக்கப்பட்ட அனைத்து வாகனங்களும் செயின் டோசர் என்றே பொதுவாகக் கூறப்படுவது வழக்கமாயினும், விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டு, கேணல் கிட்டு நினைவுப் பூங்காவில் நினைவுச் சின்னமாக வைக்கப்பட்டுள்ள அந்தப் பிரமாண்டமான ஆயுதம் தாங்கிய கனரக வாகனம் 'டாங்கி' யாகும். அந்த T.55 பிரதான சமர் டாங்கியைப் பற்றிய (T.55 - main battle tank) வியப்பான தகவல்களை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.*

வீதியில் மணிக்கு 50 கி.மீ செல்லக்கூடிய இந்த டாங்கி முன்பக்க உடற்பகுதியின் சாய்வான தகடுகளில் 9மி.மீ கவசத்தையும் பிரதான பீரங்கியைக் கொண்ட சுழல் மேடையின் முன்பகுதியில் 203மி.மீ கவசத்தையும், சுழல் மேடையின் பக்கவாட்டில் 150மி.மீ கவசத்தையும் கொண்டிருந்தபோதிலும் புலோப்பளைக்கு யாழ்தேவியில் வந்த டாங்கிக்கு டாங்கி எதிர்ப்புப் புலிவீரனின் நெஞ்சுறுதிக்கும் அவனது RPGக்கும் ஈடுகொடுக்க முடியவில்லை. "கூ" எனச் சத்தமிட்டு பெரும் நெருப்பாய் எரியத்தான் முடிந்தது. வாருங்களேன்... வந்து பாருங்களேன் அந்த வெற்றிச் சின்னத்தை...

# தந்தையின் கையில் சிலுவைச் சீவுளி

# பிள்ளையின் தோளில் சிலுவைப் பாரம்

ஐக்கிய தேசியக் கட்சிக்கு முற்றிலும் சார்பான காவல்துறையும், இராணுவமுமே திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1956ஆம் ஆண்டு பதவிக்கு வந்தபோது இருந்தன.

தொடர்ந்து 17 ஆண்டுகள் பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினால் வளர்த்தெடுக்கப் பட்ட ஐக்கியதேசியக்கட்சி சார்பு காவல்துறையும் இராணுவமுமே தற்போது திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா பிரதமராக பதவி ஏற்றுள்ளபோதும் இருக்கின்றன. தந்தைக்கும் மகளிற்கும் இடையில் இப்படி ஓர் ஒற்றுமைக்கான சூழல்.

பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தபோது காவல்துறையும், இராணுவமும் மற்றும் நிர்வாக அதிகாரிகளும் பண்டாரநாயக்காவிற்குப் பணிய பெருமளவு மறுத்தனர். இவர்கள் ஐக்கியதேசியக் கட்சிக்கு விசுவாசமாகவே செயற்பட்டனர். இதனால் பண்டாரநாயக்கா பெரும் குழப்பத்திற்கு உள்ளானார். 1947ஆம் ஆண்டு தொடக்கம் 1956ஆம் ஆண்டுவரையான பத்து ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினால் ஐக்கிய தேசியக் கட்சி விசுவாசப் படைப்பைவிடவும், 17ஆண்டுகளாகத்தொடர்ந்து பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினால் உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி விசுவாசப் படையின் பருமன் பெரியது. எனவே பண்டாரநாயக்கா எதிர்நோக்கியதை விடவும் இதில் சந்திரிகா எதிர்நோக்கவேண்டிய நெருக்கடியின் அளவும் பெரிதாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பு ஆயுதப்படையினை எதிர்கொள்வதற்காக பண்டாரநாயக்கா ஓர் உபாயத்தை வகுத்தார். தமிழரால் ஏற்படக்கூடிய ஆபத்தினை எதிர்கொள்வதற்கு ஒரு இலட்சம் தொண்டர் படையை உருவாக்கி அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்பதே அத்திட்டம் இத்திட்டத்தின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட ஜே. ஆர். இதற்கு முற்றிலும் எதிராகக் குரல் எழுப்பினார். தொண்டர் படை என்பதன் பெயரில் சுதந்திரக் கட்சிக்கான ஒரு படையை உருவாக்குவதே இதன் நோக்கமென அவர் அதனைக் கண்டித்து எதிர்த்தார். அன்று காவல்துறையும், ராணுவத்தில் ஐக்கியதேசியக்கட்சிக்கு இருந்த செல்வாக்கின் நிமித்தம் இதனை பண்டாரநாயக்காவால் செயற்படுத்த முடியாது போனது.

இவ்வாறு பண்டாரநாயக்காவின் திட்டம் குழம்பிய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் காவல்துறையும் இராணுவப் பின்னணியில் மிகவும் பலவீனமான ஒரு பிரதமராகவே அவரால் இருக்க முடிந்தது.

புதிதாகப் பெருந்தொகையில் இராணுவத்திற்கு ஆள்ச்சேர்ப்பதன் மூலம் ஏற்கனவே இருந்த இராணுவத்தினை சிறுபான்மையாக்க தந்தை திட்டமிட்டார். ஆனால் தமிழின எதிர்ப்பின் பெயரால் நாட்டின் சக்திக்கு மீறி வளர்க்கப்பட்டுள்ள பெரியளவிலான இராணுவத்தைக் கையாளப் புதிதாக இராணுவத்திற்கு ஆள்ச் சேர்த்தல் இயலாது என்பதே மகளின் நிலை. இங்கு தந்தையைப் போலவே மகளும் ஐக்கிய தேசியக் கட்சி இராணுவத்தைப் பலவீனப்படுத்தவேண்டிய அவசியம் உண்டாயினும் தந்தைக்கும், மகளிற்கும் ஒரேவகைத் தந்திரம் பொருந்தமுடியாது.

தமிழின எதிர்ப்பின் பெயரால் தனக்கென ஓர் இராணுவத்தைக் கட்டி எழுப்ப பண்டாரநாயக்கா முயன்றார். ஆனால் அது முடியவில்லை; ஆனால் தமிழின எதிர்ப்பின் பெயரால் பெரும் எண்ணிக்கையில் ஓர் இராணுவத்தினை ஜே. ஆர். ஆல் கட்டி எழுப்ப முடிந்தது. இனப் பிரச்சினையின் பெயராலேயே இராணுவம் வளர்ந்தது. எனவே இராணுவத்தினைப் பலப்படுத்த ஒரே ஒரு வழிதான் சந்திரிகாவிற்கு உண்டு. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம்தான் இராணுவத்தை அரசியலில் இருந்து பின்தள்ளலாம். அவ்வாறு இன்றித் தனக்கு எதிரான இராணுவத்தை வைத்துக்கொண்டு அரசியலை நடத்துவது என்பது அக்கினியில் நடப்பது போன்றதாகும்.

தந்தை இனவெறியின் பெயரால், "24 மணித்தியாலத்திற்குள் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றுவேன் என்ற கோசத்துடன்" பதவிக்கு வந்தார். மகள் இனப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக உறுதியளித்துப் பதவிக்கு வந்துள்ளார். தந்தையும் மகளும் இங்கு நேர் எதிர் முரணான இடங்களில் நிற்பதாகத் தோன்றுகிறது, உண்மையில் இவை ஒன்றிற்குப் புறம்பான மற்றொன்றல்ல. ஒன்றில் இருந்தே கருக்கொண்ட தர்

கத்தின் வளர்ச்சியே மற்றையது. தன்னைத் தோற்றுவித்த சக்தியையும் மீறித் தர்க்கம் வளரும். தர்க்கத்திற்கு அப்படி ஒரு பலம் உண்டு. இதனைத்தான் கார்ல்மாக்ஸின் கூரிய கண்கள் வரலாற்று விதியென அடையாளம் கண்டது. மக்களை நேசிக்கும் வரலாற்று மடியில் மாக்ஸ் தனது கூரிய கண்களை தானமாக வழங்கிவிட்டுச் சென்றுள்ளார்.

அந்தக் கண்களின் உதவியால் கலாநிதி என். எம். பெரேரா 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவைப்பார்த்து உனது இன்றைய நடவடிக்கைகள் இன்னும் இருபத்தைதந்து ஆண்டுகளின் பின்பு தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்தவைக்கும், நாடு இரத்தத்தில் மிதக்கும் என்ற பொருளில் கூறினார். கலாநிதி என். எம். பெரேரா தீர்க்கதரிசிதான்; சந்தேகமில்லை. ஆனால் பின்பு அபிலாசை எனும் சிவப்புத் துணியால் தனது கண்களை அவர் இறுகக் கட்டிக்கொண்டார்.

ஜே. ஆர். ஜயவர்த்தனாவும், பண்டாரநாயக்காவும் சேர்ந்து தமிழ் மக்களின் இரத்தத்திற் தோய்ந்தெழுந்து பெரும் பாவச் சிலுவையைக் கட்டி முடித்தனர். பின்வந்தோர் அந்தச் சிலுவைக்கு தமிழ் மக்களின் இரத்தத்தால் வர்ணம் பூசினர். ஆனால் இவர்கள் கட்டி வர்ணம் பூசிய சிலுவையை இன்று சுமக்க முடியாமல் அவர்களின் அடுத்த தலைமுறையினர் சுமந்து செல்கின்றனர். சிலுவையைக் கட்டி எழுப்பிய முக்கிய பொறியியலாளர்களில் ஒருவரான ஜே. ஆரும் அதற்கு வர்ணம் பூசிய சிறிமா பண்டாரநாயக்காவும் தமது பச்சைக் கண்களால் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவர்களின் அடுத்த தலைமுறையினர் அந்தப் பாவச் சிலுவையைச் சுமக்க முடியாமற் சுமந்து செல்கின்றனர். இவை ஒன்றுடன் மற்றொன்று சம்பந்தமற்ற இரு வேறு கூறுகளல்ல. ஒன்றின் தவிர்க்கமுடியாத வளர்ச்சியே மற்றையது. இதற்குத்தான் வரலாறு என்று பெயர். தந்தை இராணுவத்தை வளர்க்க விரும்பினார். மகள் இராணுவத்தைக் குறைக்க விரும்புகிறார். தந்தையர்கள் சிலுவையைக் கட்டினார்கள், பிள்ளைகள் சிலுவையைச் சுமக்கிறார்கள். தந்தையர்களையும் பிள்ளைகளையும் ஒரே நேர்கோட்டில் வரலாறு நிறுத்தியுள்ளது.

□ □ □

(19ம் பக்கத்தொடர்ச்சி)

## தொழில் நுட்பத்தில் சில படிக்கற்கள்


| | |
|---|---|
| C- 100 | கடதாசிகள் |
| 1100 | காந்தத் திசையறி கருவி |
| 1440S | அச்சு இயந்திரம் |
| 1590 | ஒன்றிணைந்த அணு தர்ஷினி |
| 1592 | உஷ்ணமானி |
| 1608 | தூரதர்ஷினி |
| 1620 | நீர்மூழ்கி |
| 1650 | காற்றூட்டி (Air Pump) |
| 1656 | ஊசலாடும் மணிக்கூடு |
| 1712 | நீராவி இயந்திரம் |
| 1735 | கால அளவை மானி |
| 1785 | இயந்திரத் தறி |
| 1800 | மின் கலன் |
| 1804 | நீராவிமூலம் இடம் பெயர்ந்து செல்லும் சாதனம் |
| 1816 | துவிச்சக்கரவண்டி |
| 1826 | புகைப்படக் கலை |
| 1834 | அறுவடை செய்யும் இயந்திரம் |
| 1837 | மின் தந்தி |
| 1855 | 'செலுலொயிட்' |
| 1858 | குளிர்ச் சாதனம் |
| 1864 | டைனமைற் வெடிமருந்து |
| 1868 | தட்டச்சு இயந்திரம் |
| 1876 | தொலைபேசி |
| 1877 | ஒலிப்பதிவுக் கருவி |
| 1879 | மின் குமிழ் |
| 1885 | பெற்றோல் இயந்திரத்திலான கார் வண்டி |
| 1888 | காற்றடிக்கும் குழாய் பட்டை (Tyre) |
| 1895 | வானொலி |
| 1898 | நாடாப் பதிவு இயந்திரம் |
| 1903 | ஆகாயவிமானம் |
| 1907 | உலங்குவானூர்தி |
| 1925 | தொலைக்காட்சிப்பெட்டி |
| 1930 | ஜெற் இயந்திரம் |
| 1935 | 'றாடார்' கருவி |
| 1943 | மின்னணுக் கணனி |
| 1955 | நாரினாலான பார்வைக் கண்ணாடி |
| 1956 | வீடியோ பதிவு இயந்திரம் |
| 1957 | செயற்கைத் துணைக்கோள் |
| 1960 | உஷ்ணக் கதிர்களைச் செலுத்தும் 'லேசர்' கருவி |
| 1971 | நடவடிக்கைகள் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் நுண் கணனி |
| 1987 | மட்பாண்டத்திலான உயர் தரக் கடத்திகள் |

# அடைக்கலம் தந்த வீடுகள்

சன நடமாட்டம் நிறைந்த ஓரிடம். இளைஞனொருவன் சைக்கிளில் வருகிறான். சாதாரணமான தோற்றம். தோளில் ஒரு துணிப்பை, சைக்கிளை நிறுத்திவிட்டு கடையொன்றிற்குள் நுழைகிறான். பின் வெளியே வந்து பார்வையை நாற்புறமும் அலையவிடுகிறான். துணிப்பையிற்குள்ளிருந்து எதையோ எடுக்கிறான். அது... துண்டுப்பிரசுரங்கள். அவ்விடத்தில் நின்றவர்களிடம் அவற்றை விநியோகித்துவிட்டு சடுதியில் காணாமல் போய்விடுகிறான்.

அப்பிரசுரங்களை பெற்றுக் கொண்டோரும் அவ்விடத்தைவிட்டு கலைந்துவிடுகின்றனர். ஒதுக்குப்புறங்களிலும், தத்தம் வீடுகளிலும் சென்று அவற்றை வாசிக்கின்றனர். பின் அவற்றை எரித்து விடுகின்றனர்.

சில நிமிடங்களில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்ட இடத்திற்கு சிறீலங்கா காவற்படையினர் வருகின்றனர். அங்கு நின்றவர்களை மிரட்டுகின்றனர், கடைகளுக்குள் சென்று அட்டகாசம் செய்கின்றனர். அப்பாவிகள் சிலரை அடித்து உதைத்து இழுத்துச்செல்கின்றனர்.




— விவேக் —

இன்னொரு இடத்திலும் —

இளைஞனொருவன் வருகிறான், அவ்வாறே சில பிரசுரங்களை விநியோகிக்கிறான். மறைந்து நின்ற காவல் துறையினர் திடுமென ஓடிவந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, அவன் காலில் குருதி வழிகிறது. மின்னலென பாய்ந்து அருகிலிருந்த மதில் ஒன்றின்மேல் தாவிக் குதித்து தலைமறைவாகி விடுகின்றான். மக்களிற் சிலர் துப்பாக்கிச் சன்னம் பட்டு காயமடைகின்றனர்.

எழுபதுகளின் இறுதியில் – எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழ்ப்பிரதேசங்களில் நடைபெறும் சம்பவங்கள் இவை.

ஆயுதப் போராட்டம் அரும்பிய ஆரம்ப காலங்களில் போராளிகள் துண்டுப்பிரசுரங்களினூடாகவே மக்களுடன் தங்கள் தகவல், பிரச்சாரத் தொடர்புகளை வைத்திருந்தனர். சிலசமயங்களில் உயிரைப் பணயம் வைத்தே இப்பணிகளை செய்ய வேண்டியிருந்தது.

இன்று —

பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற தகவல் ஊடகங்கள் போராளிகளிடம் உள்ளன. தமிழ் மண்ணில் பல பகுதிகள் அவர்களின் கட்டுப்பாட்டில், நிர்வாகங்கள் அவர்களது கைகளில்.

எதிரியின் முகாமைத் தேடிச்சென்று அழிக்கின்ற பலமும், இரண்டு பெண் போராளிகள் சென்று இராட்சதக்கப்பல் ஒன்றைத் தகர்த்தெறியும் மாபெரும் வீரமும், ஈகமும்......!

தமிழ் மண்ணின் மேலாகப் பறக்கும் உலங்கு வானூர்திகூட மிக உயரத்தில் பயத்துடன் பறக்கிறது.

சுமார் ஒன்றரைதசாப்த காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி வியக்கத்தக்கது தான்!

உறுதியான, உணர்வு பூர்வமான வழிகாட்டல் வீரம், ஈகம் என்பனவே இவ்வளர்ச்சிக்கான அத்திவாரங்கள்.

அந்த ஆரம்ப காலங்களில் ஆயுதமேந்திய இளம் போராளிகளை தன் சிறகுகளால் அணைத்துக்காத்த பெருமை கிராமங்களையே சாரும்.

காடுகள், வீதிகள் என அலைந்து திரிந்து அன்றாட போராட்டப் பணிகளை மேற்கொண்டு களைத்துப்போய்வரும் போராளிகளை பாதுகாத்து பாராட்டிய பண்பு கிராமங்களுக்கே அதிகம் உண்டு.

அதனால், எத்தனையோ கிராமமக்கள் படையினரால் கொல்லப்பட்டனர், எத்தனையோ குடிசைகள் தீப்பிடித்தன, வயல் நிலங்கள் சுடுகாடாகின. கைது செய்தல், துன்புறுத்துதல் என்பன தொடர்ந்தன.

கிராமங்கள் தோறும் இதுபற்றிய சோகக் கதைகள் புதைந்து போயுள்ளன. உன்னதமான கவிதைகள் அங்கே பொதிந்து கிடக்கின்றன. காலத்தால் அழியாத காவியங்கள் அம்மக்கள் வாழ்வில் மறைந்து போயுள்ளன.

இப்போது கிராமங்கள், நகரங்கள் என்ற வேறுபாடு இன்றி போராட்டத்துடன் பலரும் இணைந்துள்ளனர். படித்தவர் பாமரர் என்ற பேதமின்றி பங்களிப்புகள் நிகழ்கின்றன. போராளிகளின் பாதுகாப்பில் புத்திஜீவிகள் போராட்டம் குறித்து மேடையேறியே பேசுகின்றனர்.

இவை போராட்டத்தின் வளர்ச்சியினால் - பலத்தினால் ஏற்பட்ட மாற்றம்.

புத்திஜீவிகள் எனப்படுவோரிடம் முன்பிருந்த பயம் அல்லது நம்பிக்கையீனம் இப்போது விலகியுள்ளதுஎனலாம்.

கிராமத்து மக்கள் போராட்டத்துடன் தங்களை தொடக்க காலத்திலேயே இணைத்துக் கொண்டனர். நம்பிக்கை வைத்தனர்; பங்களிப்புகள் செய்தனர். போராளிகளைப் பாதுகாத்தனர். சில சமயங்களில் தங்களை அர்ப்பணம் செய்தே இவற்றைச் செய்தனர்.

தன்பிள்ளையை தாமே போர்க்களம் அனுப்பிவைத்த அன்னையரையும், இருபிள்ளைகள் போரிட்டு மடிந்தபின் இன்னொரு பிள்ளை இல்லையே போர்க்களம் அனுப்பிவைக்க என அழுத தந்தையரையும் கிராமங்களில் தான் காண முடியும்.

இவை கற்பனைகளல்ல; உண்மை!

செம்மலை கிராமத்திற்கு சென்றிருந்தவேளை போராளிகள் என்னிடம் சொன்னது நினைவிற்கு வருகிறது. ''இந்த மக்கள்தான் இந்திய இராணுவத்திடமிருந்து எம்மைப் பாதுகாத்தார்கள். எம்மை வீட்டிற்குள்வைத்து உணவளித்து வெளியே காவல் நின்றார்கள். புதியவர்கள் எவரும் ஊருக்குள் நுழைந்தால் எல்லையில் வைத்தே விசாரணை செய்தார்கள்''

இந்தக் கிராமங்களின் கதைகள் யாவும் வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டும். இம்மக்களின் உன்னதமான பங்களிப்புகள் ஏனையோருக்கு உதாரணங்களாக வேண்டும்.

இது பற்றி வன்னியைச்சேர்ந்த எழுத்தாளர் ஒருவரிடம் அண்மையில் கதைத்தபோது அவர் சொன்னார் —

''எழுதவும் பேசவும்தான் இப்போது பலர் இருக்கிறார்களே. அக்காலங்களில், தலைமறைவாக திரிந்த போராளிகளுடன் பழகியமை, அவர்கள் பசியுடன் வரும்போது எனது உணவை அவர்களுடன் பகிர்ந்து கொண்டமை; அவைதாம் திருப்திகரமான சம்பவங்களாக இன்றும் மனதில் நிற்கின்றன. எழுதுவதை விட'' என்றார்.

''அது உண்மைதான் ஆனாலும் இவற்றை உணர்வுபூர்வமாகப் பதிவு செய்ய உங்களைப் போன்றவர்களால்தான் முடியும், இது மேலதிக பங்களிப்பாக, திருப்திதரும் செயலாக இருக்கும் அல்லவா?'' என்றேன்.

எனது இக்கருத்தினை அவர் ஒப்புக்கொண்டார்.

## நீங்கள் தாடி வளர்த்திருப்பவரா?

அது உங்களுக்கு அழகிய தோற்றத்தைத் தருவதாக நினைக்கிறீர்களா? அப்படி நீங்கள் நினைத்தால் அது தவறு. தாடி வளர்ப்பது கெடுதல் மட்டுமல்லாமல் உங்கள் தலையை வழுக்கையும் ஆக்கிவிடும்.

தாடியிலுள்ள ரோமங்களில் 'பென்சீன் மற்றும் அமோனியா' போன்ற மாசுபடுத்தும் இரசாயனப் பொருட்கள் படிந்துவிடுகிறது.

சாதாரண மனிதன் மாசுபடுத்தும் அளவை ஒரு யூனிட் உள்ளிழுக்கிறார். ஆனால் மீசை வளர்த்திருப்பவர் 4.2 யூனிட்டுகளும், தாடி வளர்த்திருப்பவர் 1.9 யூனிட்டுகளும் உள்ளிழுக்கிறார்.

சீனப்பத்திரிகை ஒன்று மேற்கண்ட தகவலை தெரிவிக்கிறது.

காங்கேசன்துறை வீதியில் உங்கள் கவனத்திற்கு

- எவர்சில்வர்ப் பொருட்கள்
- அலுமினியப் பொருட்கள்
- வீட்டுப்பாவனைப் பொருட்கள்
- பரிசுப் பொருட்கள்
- கோவிலுக்குத் தேவையான பொருட்கள்

**இவை எல்லாவற்றையும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்**

நேராகச் செல்லுங்கள்

↓

# சிவன் மாடம்

166, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

# விறகிற்காக யாழ் மாவட்டத்தில் காடுகள் அழிப்பும்

யாழ் மாவட்ட மக்களின் விறகுத் தேவையின் பெரும்பகுதி கடந்த காலத்தில் பிற மாவட்டங்களிலிருந்து தான் பெறப்பட்டு வந்தது. எனினும் 1990 களின் பின்பு விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்த நிலையில் போக்குவரத்து சீர் இன்மையால் யாழ் மாவட்ட மக்களின் விறகுத் தேவை யாழ் மாவட்டத்திற்குள்ளேயே முழுமையாகப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும் குடா நாட்டிற்கான தரைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட காலம் முதல் வன்னிப் பகுதியில் இருந்து விறகு குடா நாட்டிற்குள் கொண்டு வரப்படாமையினாலும், மின்சாரமின்மை, எரிபொருள் விலைஉயர்வு காரணமாக அதிகரித்த விறகுப் பாவனையால்இதனைப்பூர்த்தி செய்வதற்காக கட்டுப்பாடின்றி மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே யாழ் மாவட்டத்தில் விறகுத் தேவையின் அதிகரிப்பினாலும் அவ்விறகினை யாழ் மாவட்டத்திற்குள்ளேயே பெற்று பூர்த்தி செய்ய வேண்டியுள்ளமையினாலும் துவிச்சக்கர வண்டி இதர வாகனங்களிலும் எடுத்துச் செல்கின்றோர் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது. இடம் பெயர்ந்து வாழும் மக்களும், தொழில் அற்று இருக்கும் மக்களும் குறிப்பாக துவிச்சக்கர வண்டியில் விறகு கொண்டு சென்று விற்பனையில் ஈடுபட்டுவருகின்றனர். இதனால் விறகுத் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு நீண்டகாலம் பயன்தரக்கூடிய மரங்கள், சிறுபற்றைக் காடுகள், கண்டற்காடுகள் கட்டுப்பாடின்றி வெட்டி அழிக்கப்படுகின்றன: இதனால் சூழலில் சமநிலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுவருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ் மாவட்டத்தில் ஏறக்குறைய 1,20,000 மக்கள் அகதிகளாக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி ஏறக்குறைய 1,00,000 மக்கள் தமது வேலையை இழந்துள்ளனர். இந்நிலைமைகளினால் பாதுகாப்பு காரணங்களிற்காக அதிகளவு மக்கள் நகரப்பகுதி முகாம்களில் தங்கி இருக்கின்றனர். வேலையின்மை தீவிரமடைந்த அதே நேரத்தில் விறகிற்கான கேள்வியும் முனைப்படைந்துள்ளது. இவ்வாறு துவிச்சக்கர வண்டியில் விறகு வியாபாரம் செய்வோரில் 15% மானோர் 20 வயதுக்குட்பட்டோராகவும் 20·/. மானோர் 50 வயதுக்கு மேற்பட்டோராகவும் காணப்படுகின்றனர்.

தற்போதைய நிலைமையில் ஒரு நாளைக்கு $1\frac{1}{4}$ ஹெக்டேயர் காடுகள் அழிக்கப்பட்டு வருவதாகவும் 4000 மரம் தறிக்கப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன. எனினும் யாழ் மாவட்டத்தில் 50 வயதுக்கு மேற்பட்ட பயன்தரு, நிழல்தரு மரங்கள் பெரியளவில் காணப்படுகின்றது, அதே வேளையில் 10 வயதுக்குட்பட்ட நிழல்தரு பயன்தரு மரங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவேயுள்ளது.

## நீண்டகால பாதிப்பும் தீர்வுகளும்

தற்போதைய நிலைமையில் யாழ் மாவட்டத்திற்கான விறகுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு துவிச்சக்கரவண்டி வியாபாரிகள் இயற்கையாக உள்ள முக்கியமான வரண்ட பகுதி, சிறு பற்றைக் காடுகள், கப்பூதுவெளி, கரம்பன் வெளி, வாதரவத்தை வெளி, வல்லை வெளி, முள்ளி வெளி, மண்டான்வெளி, நாகர் கோவில் வெளி, கெற்பலி, கச்சாய் கடற்கரையண்டிய பிரதேசம் ஆகியன வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே யாழ் மாவட்டத்தில் எரிபொருள் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு சிறு பற்றைக்காடுகள் அழிக்கப்படுகின்றன. இவ்வறள் வளரிகள் இந்நிலையினால் அழிக்கப்பட்டு வருவதனால் ஓரிரு வருடங்களில் இப் பிரதேசத்திலுள்ள வறள்வளரிகள் அழிந்து பாழ்நிலமாக மாறிவரும் தன்மை புவியியல் ரீதியாக ஒரு மாற்றமாக அமையும் எனலாம்.

இதன் மூலம் நில மேற்பரப்பில் ஆவியாகும் அளவு அதிகரிக்கப்படுவதுடன் மிகக் கடுமையான அளவு உலரேற்றத்தையும் எதிர் பார்க்கலாம். யாழ் மாவட்டத்தில் காணப்படும் நீர்வளத்தின் பெரும் பகுதி தரைக்கீழ் நீராகவே காணப்படுகின்றது. தாவர அடர்த்தி இவ்வாறு அழிந்து கொண்டே வருமானால் தரைக்கீழ் நீர்மட்டம் குறையும் எனலாம்.

அவ்வாறு தொடர் தேர்ச்சியாக கடற்கரையோரங்களிலும் பரந்த வெளிகளிலும் பயன்

தரு மரங்கள், கண்டல்கள், சிறுபற்றைகள், அதி களவில் வெட்டி அழிப்பதனால் மண் அரிப்பும் கடல் அரிப்பும் ஏற்பட ஏதுவாகுவதுடன் மேலும் மழை வீழ்ச்சியும் வெகுவாகப் பாதிக்கப்படுவதுடன் கோடை காலத்தில் சீதோசண நிலையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அதாவது நீண்டகால அடிப்படையில் எமது சந்ததி பாரிய நீர்வள பாதிப்பை ஏற்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப் படும்.

நீண்டகாலப் பொருளாதார பாதிப்புக்களாக பயன்தரு மரங்கள் கண்டல்கள் வெட்டப்படுவத னால்தொடர்ச்சியான பாதிப்பினை யாழ் மாவட் டம் எதிர் நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் படும். அதாவது பயன்தரு மரங்கள் தொடர்ந்தேர்ச் சியாக தறிக்கப்படுவதனால் அவற்றிலிருந்து பெறப் படும் உற்பத்திப் பொருட்களுக்கும் அதன் பக்க விளைவுப் பொருட்களுக்கும் விலை அதிகரிக்கப் படும். அத்துடன் நாம் எமது தேவையினைத்தான் கருத்தில் கொள்கிறோமே தவிர எதிர்கால சந்ததி யின் தேவைகளையும் கருத்தில் கொள்ளவேண்டி யது அவசியம்.

ஆகவே யாழ் மாவட்ட இயற்கைத் தாவரத் தினைப் பேணுவதன் மூலம் நிலவளம், நீர்வளம் என்பவற்றினை பேணுவதுடன் எமது பிரதேசத் தின் உயிர்ச் சூழல் ஒழுங்கையும் பேண முடியும் என்பதில் ஐயமில்லை.


யாழ் அருச்சுனா வீதியில்

'சாமினி இரும்பகம்'

இரும்புப்பொருட்கள், வர்ண்ணப்பூச்சுக்கள்,
கட்டடப் பொருட்கள், மேலும் பலவகைப்
பொருட்களுக்கு எம்மிடம் வாருங்கள்

மொத்த, சில்லறை வர்த்தகம்

சாமினி இரும்பகம்

242A, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

# "ஒன்றைப் பார்த்து அப்படியே பிரதி செய்தல் கலையாகாது"

**7-8-94** அன்று வீரகேசரியில் வெளியான பேட்டி ஒன்றில் இந்திய கலைஞரும், உலகப் புகழ் பெற்ற ஓவியருமான திரு. ராஜாபாதர் பாலபாஸ்கரன் (52) தேடலும் படைப்புலகமும், நூல் பற்றியும், ஈழத்தின் ஓவியக் கலை பற்றியும் தனது கருத்தினைக் கூறியுள்ளார். "உண்மையில் இது மிகஆரம்ப நிலையிலே உள்ளது... உண்மையைச் சொல்வதானால், மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இப் படைப்புகள் எதுவும் அல்லது எந்தப் படைப்பாளியும் குறிப்பிடும்படியாய் திருப்திகரமாய் இல்லை. இது ஓர் வளமான ஓவியச் சூழல் பற்றிய நம்பிக்கையை எனக்குத் தரவில்லை" என்கிறார்.

அப்படியானால், நாம் இன்னும் ஆரம்ப நிலையிலேயே – வளர்ச்சியடையாத நிலையில் இருக்கிறோமா? இது கலைஞர்களின் தவறா? இல்லையெனில் அந்த குறிப்பிட்ட (தேடலும்படைப்புலகமும்) புத்தகத்தில் மட்டும்தான் தவறா? கலை சரியாக வளர்க்கப்படவில்லை எனில் அதற்கு யார் காரணம்? இதன் பரிகாரம் தான் என்ன? இப்படி பல கேள்விகள் நம் முன் எழுகின்றன. நம் சந்தேகங்களுக்கு, ஈழத்தின் முன்னணி ஓவியர்களில் ஒருவரும், தேடலும் படைப்புலகமும் புத்தகத்தின் நாயகனும் பல ஓவியர்களை உருவாக்குபவருமான திரு. அ. மார்க் பதிலளிக்கிறார்.

## மார்க் அவர்களுடன் ஒரு நேர்காணல் – *மாதவி* –

**கேள்வி:** *இந்த விமர்சனம்பற்றிய தங்கள் கருத்தை கூறமுடியுமா?*

**மார்க்:** இந்தப்பத்திரிகையை (வீரகேசரி) படிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை, மேலும் எந்தச்சந்தர்ப்பத்திலும், நான் எதற்காகவும் எதிர்ப்பு தெரிவிக்க விரும்புவதில்லை. நான் என்னுடைய வேலைகளிலேயே அதிக கவனம் செலுத்துகிறேன். இந்தியாவுடன் ஒப்பிடும் அளவிற்கு வளர்ச்சியடையவில்லையென்றாலும், இங்கேயும் கலை நல்ல வளர்ச்சியடைந்துள்ளது என்றே கருதுகிறேன். வாய்ப்புகள் இல்லாததினால் வளர்ச்சி குறைவு என்பது தான் உண்மை.

**கேள்வி:** *வாய்ப்பு என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?*

**மார்க்:** ஓவியச் சான்றிதழ் (Art Certificate) கிடைத்தாலும் உயர்தரப் பரீட்சையில் (A/L) ஓவியமும் சேர்த்து மூன்று பாடங்கள் இருந்தால் தான் ஓவிய ஆசிரியர் வேலைகிடைக்கும். இப்படியும் சிலரே தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மற்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

**கேள்வி:** *வெறும் ஓவிய ஆசிரியர்களை உருவாக்கும் வேலை வாய்ப்புச் சாதனமாகக் கருதி செயல்படுவதால் இந் நிலையா?*

**மார்க்:** ஆமாம்: இங்கே அப்படித்தான் நடக்கிறது.

**கேள்வி:** *'தேடலும் படைப்புலகமும்' பற்றிய தங்கள் கருத்து?*

**மார்க்:** கட்டுரைகள் அனைத்தும் மிகச்சிறந்தவை. அந்த மலர் என்னை கௌரவிக்கும் பொருட்டே வெளியிடப்பட்டது. என்னுடைய நவீன ஓவியங்கள் மற்றவர்களுக்கு விளங்க வேண்டுமானால், அந்த கட்டுரைகள் அதில் இடம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் வெளியிட்டுள்ளனர். இப்படிப்பட்ட புத்தகங்கள் வரத்தான் வேண்டும். இப் புத்தகத்தில் மேல் நாட்டு படைப்பாளிகள் பற்றியும், இந்திய படைப்பாளிகளைப் பற்றியும், பின்பு என்னைப் பற்றியும் வந்துள்ளது.

**கேள்வி:** *இயற் பண்பு ஓவியம் (Classical Art), நவீன ஓவியம் (Modern art) இரண்டிற்குமுள்ள வேறுபாட்டையும், நீங்கள் நவீன ஓவியத்தை தேர்ந்தெடுத்ததன் காரணத்தையும் சொல்லமுடியுமா?*

**மார்க்:** ஒரு கலைஞன் தனக்குள் பதிந்தவற்றை வெளிப்படுத்தும் ஒரு சாதனம் தான் கலை. இயற்பண்பு ஓவியத்தில் ஒருகலைஞன் தன்னை வெளிப்படுத்துவது கடினம். நவீன ஓவிய பாணியில் கலைஞன் தன்னை பல விதங்களாலும் வெளிப்படுத்திக் கொள்ள முடியும். மேலும் நாம் உலக தரத்திற்கு உயர வேண்டு

மென்ற நோக்கில் மேல் நாட்டு பாணியிலான நவீன ஓவியத்தைத் தேர்ந்தெடுத்தேன்.

**கேள்வி:** *மேலை நாடுகளிலும் இவர்களை பொய் புரட்டுக் காரர்கள் (bunkumists) என்கிறார்களே?*

**மார்க்:** இங்கும் 'மொடன்' ஆர்ட் என்று சொல்லுகிறார்கள். தெரியாதவனுக்கு 'மொடன்' ஆர்ட் தான். எனக்குத் தெரிந்த வரையில் (take the wanted things, throw away the unwanted things) — தேவையானவற்றை எடுத்துக் கொண்டு, வேண்டாதவற்றை தூக்கி வீசி விடுவது. மேலும் குறியீடுகள் (simbolysm) காகின் சொல்கிறார் (Go to the nature, study the nature, take the essence and then create) இயற்கையிடம் செல்லுங்கள் இயற்கையை படியுங்கள் அதன் கருவை எடுத்து ஆக்கத்தைச் செய்யுங்கள் மாடு ஒன்றை கீறுவதென்றால், மாட்டைக் கீறுவதல்ல, மாட்டின் தன்மையைக் கீறுவதே நவீன ஓவியம். ஒன்றைப்பார்த்து அப்படியே பிரதி செய்வது கலையாகாது.

**கேள்வி:** *ஆனால் ஒரு சாதாரணன்— பாமரன் புரிந்து கொள்ள முடிவதில்லையே?*

**மார்க்:** மற்றவர்களுக்குப் புரியவில்லையென்றால் நான் வரையக் கூடாதா? என் உணர்வுகளை வெளிப்படுத்த நான் இந்த வழியைப் பின்பற்றுகிறேன். இது மற்றவர்களுக்குப் புரியவில்லையென்றால் நான் என்ன செய்ய? விளங்க வைக்க வேண்டும். (educate them) அவர்களை படிப்பியுங்கள் உங்களுடைய முந்தைய கேள்விக்கும் இதுவே பதில் (கலை வளராதது ஏன்?)

**கேள்வி:** *சரியாக கற்பிக்காதது யாருடைய தவறு?*

**மார்க்:** எங்களுடைய படைப்புக்கள் தொடர்ந்து காட்சிக்கு வைக்கப்படவேண்டும். புத்தகங்கள் சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஊக்கமளிக்க வேண்டும். இவைகளைக் கொண்டுதான் கற்பித்தல் வேண்டும்.

**கேள்வி:** *பத்திரிகைகள் எந்த அளவிற்கு பங்காற்றுகின்றன?*

**மார்க்:** பத்திரிகைகள் ஓரளவிற்கு ஊக்கமளிக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். முன்பு எம்மை ஏற்றுக்கொள்ளாத பத்திரிகைகள் கூட இப்போது என்னிடம் கேட்டு வாங்கிப் பிரசுரிக்கின்றன.

**கேள்வி:** *மேலும் வளர்க்க உங்களுடைய ஆக்கபூர்வமான யோசனைகளை கூறுங்கள்.*

**மார்க்:** தொடர்ச்சியாக கண்காட்சிகளும் (Regular Exihibitions) பத்திரிகைகளில் விவரணங்களும் (Illustrations) தொடர்ந்து வெளிவர வேண்டும். நான் பொதுவாக சஞ்சிகைகளுக்குப் படம்வரைந்து கொடுப்பதில்லை. கொடுத்தாலும் கிடைக்கும் சம்பளம் என்னவோ மிகச்சொற்பமே, சிலர் வெறும் நன்றியுடனும் போய்விடுகிறார்கள். இங்கே கலைப் பள்ளியும் கலைக்கூடமும் அமைக்க வேண்டும். இங்கே பல்கலைக்கழகத்தில் நுண்கலைப் பிரிவிலும் கோட்பாடு (Theory) மட்டுமே கற்பிக்கப்படுகிறது. இதுபற்றியும் கல்வித் திணைக்களத்துடன் முயற்சி செய்துவருகிறோம். ஓவியர்களிடமிருந்து ஏனையோர் விலை கொடுத்து வாங்க வேண்டும். வீட்டிற்கு ஒரு ஓவியம் தொங்கவேண்டும்; காசு செலவு என்றாலும்கூட சமீபகாலங்களில்மோனாலிசா, அழும் குழந்தையின் படங்களை பலவீடுகளில் பார்க்க முடிகிறது. ஆனால் பாருங்கோ, ஒரு நவீன ஓவியத்தை யாரும் தொங்க விடுவதில்லையே!

**கேள்வி:** *சகலருக்கும் விளங்காததும் ஒரு காரணமாய் இருக்கலாம் அல்லவா?*

**மார்க்:** அப்படியென்றால் வாழைப்பழத்தை உரித்து தீத்துங்கோ என்கிறீர்களா?

**கேள்வி:** *அப்படியில்லை; கலைக்கு எளிமை முக்கியமில்லையா?*

**மார்க்:** விளங்கவில்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். மக்கள் தான் கற்றாக வேண்டும். நாம் இப்படி விட்டுக் கொண்டு போவதுதான் தவறு; என் 60வது பிறந்தநாளின் போதுவைத்த கண்காட்சிப் படங்களுக்குதலைப்பு(Title) போடவேண்டாம் என்று சொல்லிவிட்டேன். உங்களுக்கு எப்படிப்படுகிறதோ அப்படியே எடுத்துக்கொள்ளுங்கள்என்று விட்டுவிட்டேன். விளக்கம் தேவையானால் தெளிவு பெற நான்கு மாணவர்களை விட்டு விளக்கம் கொடுக்கச் சொன்னேன். (தான் வரைந்த காவடி

ஆட்டப் படத்தைக் காட்டுகிறார்)நான் வரைவது காவடி ஆட்டமே தவிர, கண், காது,மூக்கு அல்ல. நான் கண்டு அடைந்த உணர்வை வெளிப்படுத்த நவீன ஓவியம் நல்லதொரு சாதனம். இயற்பண்பு ஓவியம் இருப்பதை அப்படியே பிரதி செய்வது எனக்கு எது தேவையோ அதை எடுத்து வேண்டாததை வெட்டிவிடலாம் இதை நவீன ஓவியம் அனுமதிக்கின்றது; மறு பிரதிக்கு ஒரு புகைப்படப்பிரதி போதுமானது. மேலும் நான் தாக்கம், பிரதி பலிப்பு (Response) பற்றிக் கவலைப் படுவதில்லை.

**கேள்வி:** *இங்கே ஓவிய விமர்சகர்கள் இல்லையென்று சொல்லலாம்; கலைக்கு விமர்சனம் முக்கியமில்லையா?*

**மார்க்:** விமர்சனம் இருந்தால்தான் கலை வளர முடியும்; இப்போ என்னைப் பற்றி என் படைப்புக்கள் பற்றி நிறைய விமர்சிக்கப்பட்டதன் விளைவே தற்போதைய என் வளர்ச்சிக்குக் காரணம் எனக் கூறலாம்.

**கேள்வி:** *உங்களுடைய படைப்புக்கள் பற்றிக் கூறுங்களேன்?*

**மார்க்:** பல ஓவியங்களை (Paintings) கறையான் அரித்ததால் எரிக்கவேண்டி வந்தது. தற்போது500–600 ஓவியங்கள் செய்துவைத்துள்ளேன். நான் செய்வதெல்லாம் மிக இலகுவானது; ஏன் வெறும் பத்திரிகைத் தாள் (Magazine Paper) களிலிருந்து கூட நான் பல ஓவியங்களை (Paintings) உருவாக்கியுள்ளேன். ஆனால் ஒன்று, எனக்கென்று எந்த ஒரு பாணியையும் பின்பற்றுவதில்லை.

**கேள்வி:** *ஏன் உங்களுக்கென்ற தனிப்பட்ட பாணி ஏதும் இல்லை?*

**மார்க்:** என்னைப் பாதித்த ஒன்றைப் பற்றி யோசிக்கையில் எனக்குள் ஓர் உறுத்தல் வரும்; நான் புதிதாய் ஒன்றைக் கண்டு பிடித்து என் மாணவர்களுக்குப் போதிப்பேன். பின் வேறொன்றைப் பின்பற்றி புதிதாய் உருவாக்க ஆரம்பித்து விடுவேன்.

**கேள்வி:** *உங்களுக்கென்ற தனியான 'பாணி' ஏதும் இல்லாததை ஒரு குறையாக நீங்கள் கருதவில்லையா?*

**மார்க்:** எனக்கென்று வாஷிங் ஸ்ரைல் (Washing Style) வைத்திருந்தேன். அதில் தான் எனக்கு டிப்ளோமா (Diploma) வும் கிடைத்தது; பின் யோசிக்கையில் பழையவற்றையேதான் புதிதாக மெருகூட்டிச் செய்வதாக எண்ணியதால் அதையும் விட்டுவிட்டேன்.

**கேள்வி:** *தங்களின் சக கலைஞர்கள் பற்றி.........*

**மார்க்:** என்னைப்போல பல ஓவியர்கள் இருந்தும், ஒரு சிலரைத் தவிர ஏனையோர் இப்படி நிறைய மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை. என்னைப் போல் சிவப்பிரகாசமும் கற்பிக்கிறார். நான் பலருக்குக் காசு ஏதும் பெற்றுக் கொள்ளாமலேயே பல வருடங்களாகக் கற்பிக்கிறேன். தகுதியுடைய (Qualified) ஆட்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களே ஏதும்செய்கிறார்களில்லை. இளைய சமுதாயத்திற்குச் சொல்லிக் கொடுங்கள் என்றால் ''எங்களுக்கே நேரமில்லை'' என்பார்கள். இங்கே காட்சியில் (Exihibition) படங்கள் வையுங்கள் என்றால் அந்தக் காலத்தில் செய்த படங்களே தொடர்ந்து வரும். 87ஆம் ஆண்டு 'தேடலும் படைப்புலகமும்' புத்தகம் வெளியிடப்பட்டது. ஏன் வேறு புத்தகங்களை மற்றவர்கள் வெளியிடக் கூடாது?

**கேள்வி:** *மாணவ சமுதாயத்திற்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

**மார்க்:** ஓவியம் சகல பாடங்களுக்கும் உதவி செய்யும். உயிரியல்(Bio-Science) மாணவி ஒருவர், தனக்குப் பாடம் கற்பிக்கப் படும்போது, அது படமாக தன் மனதில் பதிந்துவிடும் என்கிறார். ஓவியம் எல்லா மாணவர்களுக்கும் உதவியாக இருக்கும். மேலும் நான், என் தனிப்பட்ட உழைப்பினால் ஏற்பட்ட வளர்ச்சி என்பதைக் காட்டிலும், என் மாணவர்களினாலேயே வளர்ச்சியடைந்துள்ளேன். என் மாணவர்களில் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கும் என்னைப் பற்றி பல கட்டுரைகள் எழுதியுள்ளனர். இவர்களால் தான் எனக்குத் தொழில்வாய்ப்புக் (Practice) கூடுகிறது என்றும்சொல்ல வேண்டும்.

# இரத்தச்சோகை நோய்

## கற்கும் திறனை பாதிக்கும்

கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைவதற்கு உடலினதும் மூளையினதும் ஆரோக்கியம் மிகவும் அடிப்படையானது. மனிதனுடைய ஆரோக்கியத் திற்கு நல்ல இரத்தம் இன்றியமையாதது. ஏனெனில் இரத்தமே எமது உயிர்வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஒக்ஸிஜன் என்கின்ற உயிர்வாயுவையும், சக்தியை வழங்குகின்ற குளுக்கோசையும் உடல் முழுவதும் கொண்டு செல்கின்றது. குறிப்பாக மூளைக்கு இடைவிடாமல் தொடர்ச்சியாக வழங்குகின்றது. இதற்கு இரத்தத்திலுள்ள ஹீமோகுளோபின் (Haemoglobin) என்கின்ற செந்நிற – இரும்புப்புரதமே காரணமாகும். வயது வந்த பெண்ணிலும், ஆணிலும் ஏறக்குறைய நூறு மில்லிலீற்றர் இரத்தத்தில் 12 – 13 கிராம் இது இருக்கும். 10 கிராமிற்குக் கீழ் இதனளவு குறைந்தால் 'இரத்தச்சோகை'' (ANAEMIA) என்கிறோம்.

### இரத்தச்சோகையினால் ஏற்படும் பிரச்சினைகள்

| | |
|---|---|
| தலையிடி | மூச்சிளைப்பு |
| களைப்பு | தலைச்சுற்று |
| இளைப்பு | வேலை செய்ய முடியாமை |

தலைக்குள் துடிப்பது போன்ற உணர்வு
காதுக்குள் துடிப்பது போன்ற உணர்வு
காதுக்குள் சத்தம் கேட்டல்
கண்களில் பார்வை குறைதல்
நித்திரை கொள்ள முடியாமை
நெஞ்சு (இருதயம்) துடித்தல்
தோல், உள்ளங்கை, கண்கள்–வெளிறியிருத்தல்
இருதயம் விரைவாகத் துடித்தல்
கைவிரல்களில் வலி எடுத்தல்
கால் விரல்களில் வலி எடுத்தல்
நெஞ்சில் வலி எடுத்தல்
கால்கள் வீங்குதல் என்பன ஏற்படும்.

### ஏன் இரத்தச்சோகை ஏற்படுகின்றது?

வயிற்றில் பூச்சிகள் இருத்தல்
இரும்புச்சத்து, விற்றமின், போலேற்று, விட்டமின் சீ, புரதம் போன்ற சத்துணவுக் குறைபாடுகள் இருத்தல்
மலேரியாக்காய்ச்சல் அடிக்கடி ஏற்படுதல்
நெருப்புக்காய்ச்சல் ஏற்படுதல்
மூலவருத்தத்தினால் மலத்துடன் இரத்தம் வெளியேறுதல்
கசநோய் இருத்தல்
இருதயத்தில் குறைபாடுகள், நாமற்றிக்காய்ச்சல் இருத்தல்
கழுத்தில் கழலை வியாதி இருத்தல்
மாணவிகளுக்கு மாதவிடாயின்போது மேலதிக இரத்தப்பெருக்கு அல்லது மாதவிடாய் அடிக்கடி ஏற்படுதல் அல்லது நீண்ட நாட்களுக்கு ஏற்படுதல்
இரத்தப் புற்றுநோய் இருத்தல்
உடலில் வேறு புற்றுநோய் இருத்தல்

### என்ன செய்யவேண்டும்?

இதில் ஒன்று அல்லது பல பிரச்சினைகள் உங்களில் யாருக்காவது இருந்தால் அலட்சியம் செய்யாதீர்கள்

அருகிலுள்ள மருத்துவரிடம் அல்லது மருத்துவமனையில் உங்களைக் காட்டிப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

இரத்தத்திலுள்ள செந்நிற இரும்புப் புரதச்சத்தினளவை ஒருமுறை சோதித்து (HB./.., WBC/DC, Blood picture, ESR) உங்கள் இரத்தத்திலுள்ள பிரச்சினையை அறிந்து கொள்ளுங்கள்.

இந்தப் பரிசோதனைகள் மிக இலகுவாக அனேகமான மருத்துவமனைகளில் செய்யலாம்.

### தடுப்பதற்குச் சில ஆலோசனைகள்

நாள்தோறும் உணவுடன் ஒருகீரை, பொன்னாங்காணி, அகத்தியிலை, முருங்கையிலை, சண்டியிலை, தவசிமுருங்கை, முளைக்கீரை, என்பவற்றை தவறாமல் உண்ணுங்கள்.

3 – 6 மாதங்களுக்கொருமுறை பூச்சிமருந்துகளான கொம்பான்றின், வேர்மொக்ஸ் குடியுங்கள்.

வீடு வளவுகளைச் சுத்தம் செய்து நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி மலேரியா ஏற்படு வதைத் தடுங்கள்.

எப்போதுமே குடிப்பதற்கு கொதித்து ஆறிய நீரையே பயன்படுத்தி, உணவு உண்ண முன்ன ரும், மலசலம் கழித்த பின்னரும் சவர்க்காரம் இட்டு கைகளைக் கழுவி, கடைகளிலும் வீடு களிலும் ஈக்கள் இலையான்கள் அளைந்த உணவு களை உண்பதைத் தவிர்த்து நெருப்புக்காய்ச்சல், வயிற்றுளைவு ஏற்படுவதைத் தவிருங்கள்.

மாதவிடாய்ப் பிரச்சனை இருந்தால் மகப்பேற்று நிபுணரைக் காணுங்கள்.

சுசநோய், நூமற்றிக்காய்ச்சல், மூலவருத்தம், கழலைவியாதி என ஏதேனும் இருந்தால் மருத்து வர்களிடம் காட்டி சரியான சிகிச்சையைப் பெறுங்கள். இதன் மூலம் கற்கும் திறன்கூடி நல்ல பெறுபேறுகளைப் பெறலாம்.

| வயது | கொம்பான்றின் குளிசை | | வேர்மொக்ஸ் |
|---|---|---|---|
| 2 – 9 | 02 | ஒரே நேரத்தில் குடிக்க வேண்டும் | இரண்டு வயதிற்கு மேல் அனைவருக்கும் காலை ஒன்றுமாலை ஒன்று என மூன்று நாட்களுக்குக் குடிக்க வேண்டும். |
| 9 – 12 | 03 | | |
| 12 – 16 | 04 | | |
| > 17 | 05 | | |

வைத்தியகலாநிதி. எஸ். பி. ஆர். சிர்மாறன்
யாழ். பல்கலைக்கழகம்

# இயந்திரம் பழுதுபார்த்தல்

## ஸ்பெசல்

## என்ஜினியேர்ஸ்

டீசலில் இயங்கும் சகல விதமான மின்பிறப் பாக்கிகள் பெற்றோல், மண்ணெய்யில் இயங்கும் மின்பிறப்பாக்கிகள் நீரிறைக்கும் இயந்திரங்கள், 'டைனமோக்கள்' மற்றும் 'லான் மாஸ்ரர்' போன்ற சகலவித இயந்திரங் களும் தரமான முறையில் குறித்த தவணையில் பழுதுபார்த்துப் பெற்றுக்கொள்ள -

**8 A**, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# தேசம் விடுதலை பெறுவது உங்கள் கையில்



## மாணவர் பக்கம்

கல்வி கற்றல், கற்பித்தல் என்ற உறவு நிலையானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து, குரு - சீட பரிபக்குவ நிலையில் இருந்து வளர்ச்சி பெற்று, இன்று அந்த, உறவானது ஒரு நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்தி

– வல்வையான் –

யுள்ளதைக் காணலாம். இன்று, மாணவனுக்கும், ஆசிரியனுக்குமிடையில் உள்ள தொடர்பானது, வேறு உறவுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு உணர்வு பூர்வமான நிலையில் காணப்படுகின்றது.

இன்று, தன் ஆசிரியரைப் பற்றியே மாணவன் சிந்திப்பதும், தமது மாணவரைப்பற்றியே ஆசிரியர் கனவு காண்பதும் அந்தப் பரிணாம வளர்ச்சியின் ஒரு உச்ச நிலையாகும். இந்த நிலையில், ஒரு மாணவன் எதனை எதிர்பார்க்கின்றான்; அவனுக்கும் இந்தச் சமூகத்திற்கும் உள்ள உறவுநிலை; அவனுக்கும் இந்தத் தேசத்திற்கும் இடையிலான பிணைப்பின் தேவைகள், என்பவற்றை அறிந்து, அவனை நெறிப்படுத்த வேண்டிய நிலையில் ஒரு ஆசிரியரின் பொறுப்பானது இன்று விரிந்து செல்கின்றது. ''எழுதாத வெள்ளைக் காகிதங்களாக'', விரும்பிய உருவத்தில் வடிவமைக்கக் கூடிய ''பச்சைக்களி உருண்டைகளாக'', ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுகின்ற ஒரு மாணவனின் உள்ளத்தில் நலல உணர்வுகளைப் பதியவைப்பதும், சமூகத்தில் பயன்படககூடிய உருவத்தில் ''ஒரு நல்ல மனித உருவாக'' அவனை வடிவமைத்துக் கொடுப்பது ஒரு ஆசிரியரின் கடமையாகும்.

அந்த வகையில் ஒரு மாணவனை,

* எதையும் பகுத்துணரும் புத்தி ஜீவியாக
* உடல்நலமுள்ளவர்களாக
* பொருத்தமுடைய ஒரு பிரஜையாக
* நற்பண்புடையவராக
* நாட்டுப்பற்றுடையோராக
* தேசிய உணர்வுடையவர்களாக

உருவாக்குவது ஆசிரியரின் கடமையாகும். அதேவேளையில் ஒரு மாணவன் தன், ஆசிரியரைத் தனது வழிகாட்டியாகவும் உதாரண புருஷராகவும் வரிந்து மனதில் நிறுத்தி, அவரைப்போல்

* நடை உடையிலும் * பழக்கவழக்கத்திலும்
* அறிவுத் திறனிலும் * செயற் திறனிலும்
* நற் பண்பிலும்
* கொள்கை, கோட்பாட்டிலும்

தன்னையும் இணைத்துக் கொண்டு, அந்த வரன்முறைக்குட்பட்ட ஒரு வாழ்க்கை முறையினைத் தானும் பின்பற்றி வாழப்பழகிக் கொள்

கின்றாள். இத்தகைய ஒரு தன்னலமற்ற புனித மான உறவு நிலையிலேயே, ''மாணவ - ஆசிரிய பரியந்தம்'' இன்று தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது ஒரு சமூக, உருவாக்கத்தின் பிரதான காரணியாகும். எனவே எமது தமிழீழ தேசத்தின் மாணவர்கள்,

''எப்படியும் வாழலாம் என்ற தான்தோன்றித்தனமான பேடிமை வாழ்க்கை முறையில் இருந்தும் விலகி, இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரன்முறையுடன் ஒரு குறிக்கோளை நோக்கியதாகத் தம் வாழ்க்கை முறையினை ஏற்படுத்தி வாழப்பழகவேண்டும். அதன் மூலம் தான் வாழும் சமூகத்திற்கும், தனக்கும், இந்தத் தேசத்திற்கும் பொருத்தப்பாடுடையவர்களாகவும் தம்மை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் இந்தத் தேசமும், மக்களும், மொழியும், இனமும் விடுதலை பெறும்.

# மண்ணில் பிறப்பதைவிட விண்ணில் பிறப்பது சிறந்ததா?

இன்றைய விஞ்ஞான உலகில் தாவரங்களைப்போன்ற பதிய முறையிலும் சிசுபதியங்கள் உருவாக்கும் முயற்சி வெற்றி அளித்து வருகின்றது. அவ்வாறே விண்வெளியில் பிறக்கும் குழந்தைகளும் அபாரசக்திமிகு குழந்தைகளாக விளங்குகின்றன.

அண்மையில் விண்வெளியில் பிறந்த குழந்தையொன்று வியத்தகு சாதனை படைத்து வருகின்றது. 'நாசா' விஞ்ஞானிகளின் பரிசோதனையான இந்த விண்வெளிப்பேறு மிக இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது. குழந்தையும் தாயும் நலமே பூமிக்குத்திரும்பி, பாதுகாப்புப்படையினரின் கடுங்காவலில் இருந்து வருகின்றனர். வைத்தியர்கள் இக் குழந்தையின் வளர்ச்சியும், ஆரோக்கியமான துரித நடவடிக்கைகளும் குறித்து வியப்படைந்துள்ளனர். இந்த இரகசியம் இரண்டு வருடங்களின் பின்னர் அம்பலமாகியுள்ளது.

சாதாரண குழந்தையைப்போன்று காட்சியளிக்கும் இக்குழந்தை வளர்ச்சியடைந்த மனிதனின் சக்திக்கு இணையாகச் செயற்படுகின்றது. காவீலோவீ என அழைக்கப்படும் இக் குழந்தைக்கு நன்றாக நடக்கவும் எழுத,வாசிக்க, கதைக்கவும் முடியும். உடற்பயிற்சி வீரனைப் போன்று செயலாற்றவும் முடியும். இரண்டு வயதுக்குழந்தையான காவீக்கு 250 இறாத்தல் எடையை கைகளினால் தூக்கி தலைக்கு மேலே உயர்த்த முடியும். 100 யார் இடைத்தூரத்தை 10 செக்கனிலும் ஒரு மைல் தூரத்தை 3 நிமிடம் 50 செக்கனிலும் ஓடிக்கடக்கமுடியும். பெரிய வாகனங்களைத் தாண்டிப்பாயமுடியும். பேஸ் பந்தை 80 அடி உயரத்திற்கு அதிகமாக வீசி எறியவும் முடியும். இக்குழந்தை பிறந்தது முதல் ஆதியிலிருந்து விஞ்ஞான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட வரையில் டாக்டர் ஜோர்ஜ் கீல் மிக அவதானமாக ஆராய்ந்து வருகின்றார்.

1990 ஆம் ஆண்டு நாசா நிறுவனம் மிகவும் இரகசியமாக ஒரு கர்ப்பிணிப்பெண்ணை விண்வெளிக்கு அனுப்பிவைத்தது. 1991 ஆம் ஆண்டு விசேட மருத்துவ அறையில் வாழ்ந்த இப்பெண் இருண்ட விண்வெளிப்பகுதியில் மகன் ஒருவனைப்பெற்றெடுத்தாள். பூமிக்குத் திரும்பிய தாயும் சேயும் வைத்தியம் பார்த்த டாக்டரும் ஒரு மாதம் வரையும் நடக்கமுடியாது படுக்கையில் இருந்தனர். காற்று கன அடர்த்தி குறைவான பகுதியில் குழந்தை பிறந்தபடியால் ஆரோக்கியமாக வளருமா? என அஞ்சிய விஞ்ஞானிகளுக்கு குழந்தையின் துரிதவளர்ச்சி வியப்பில் ஆழ்த்தி வருகின்றது.


எதிர்காலத்தில் பாரிய கட்டிடங்களைத் தகர்த்துவிடவும், துப்பாக்கிக்குண்டுகளின் வேகத்தைவிட விரைவாக ஓட்டம் எடுக்கும் சக்தியையும் கொண்டு விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழந்தை பிறந்த சூழலைப்போன்று பூமியிலும் ஒரு சூழலை விஞ்ஞானிகள் உருவாக்கி புதியதொரு முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

**டாக்டர். எஸ். பி. ஆர். சிறீமாறன்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இன்று தொழில் நுட்ப ரீதியாக மக்கள் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளனர். தொழில்நுட்ப ரீதியான மாற்றங்கள் இல்லாவிடில் இன்று நாம் மிக மிகப் பின்னடைந்தவர்களாகவே இருந்திருப்போம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எம்முடன் 'அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ள இத்தொழில் நுட்பங்கள் மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளான ஊன், உடை, உறைவிடம் என்பவற்றிற்குப் பாரிய முன்னேற்றங்களை வழங்கியுள்ளன.

பசளையிடப்படாத சம தரைகளில் பரவிப் பயிரிடப்பட்ட பயிர்களெல்லாம் இன்று பலவகையான இரசாயனப் பசளைகளுடன், பக்குவப்படுத்தப்பட்ட நிலங்களில் பல சிறந்தவர்க்கங்களாகப் பயிரிடப்படுகின்றன. பல மாதங்களோ பல வருடங்களோ எடுத்தநெல் அறுவடை, போக்குவரத்து, சந்தைப்படுத்தல் என்பன யாவும் சில மணிநேரங்களினுள் செய்து முடிக்கப்பட்டு உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பக்கூடியதாக இருக்கின்றது.



## அன்றிலிருந்து இன்றுவரை

# தொழில் நுட்பவியல்

(1)தொழில் நுட்பத்தின் முதலாவது பிரயோகம் ஆடைகள் வீடுகள், கல்லினாலான வண்டிகள், பலகைகள், சிறிய உலோகங்கள் ஆகியவற்றைத்தயாரிப்பதாக இருந்தது.

(2)நெம்புகோல்கள், சம்பிகள் போன்ற சிறிய இயந்திர அபிவிருத்தியுடன் மக்கள் உயர்ந்த பல அடுக்குகளைக் கொண்ட அமைப்புக்களைத் தயாரித்தனர். அவர்கள் கண்டு பிடித்த பொருட்களைக் கொண்டே இவை தயாரிக்கப்பட்டன.

(3) அச்சிடும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு அறிவு பரவத் தொடங்கிய போது தகவல் போக்குவரத்துக்கான ஊடுவழி கண்டு பிடிக்கப்பட்டது.

(4) கைத்தொழில் புரட்சிக்கான மூலகாரணம் நீராவி இயந்திர அபிவிருத்தியாகும். இது முதலில் சுரங்கங்களிலுள்ள இயநதிரங்களை இயக்குவதற்கும் (வாயுவாங்கி இறைக்கும் இயந்திரங்கள்) தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களை இயக்குவற்கும் பயன்படுத்தப்பட்டன. இது பின்னர் சக்திவாய்ந்த இடம் விடடு இடம் செல்லும் இயந்திரப் பாவனைக்காகவும் தயாரிக்கப்பட்டது.


(5) உள்ளகத்தில் எரியும் இயந்திரங்கள்'பெற்றோல், டீசல் இயந்திரங்களும் பின்னர் வந்த வாயு இயந்திரங்களும் கண்டு பிடிக்கப்படும்வரை நீராவி இயந்திரமே சக்தி வாய்ந்ததாக இருநதது.

(6) மின்னணுக்கள் தகவல் தொடர்புகளைப் புரட்சிகரமாக்கியதுடன்கணனித் தயாரிப்புக்களையும் சாத்தியமாக்கியது.

அன்று இலை தழைகளினாலும், மரப்பட்டைகளினாலும், மிருகங்களின் தோல்களினாலும் ஆடைகளை அணிந்த மனிதர் இன்று பருத்தி, பட்டு, கம்பளி போன்ற பல்வேறு துணி வர்க்கங்களில், கண்களைக் கவரும் வர்ணங்களில் ஆடைகளை அணிகின்றனர்.

குகைகளிலும், மரங்களின் மேல் பரண்களிலும் வாழ்ந்த மனிதர்கள் இன்று நவீன வசதிகளைக் கொண்ட வீடுகள், மாட மாளிகைகள், கூட கோபுரங்கள், தொடரடுக்கு மாடிகள் என்பவற்றில் குடியிருக்கின்றனர்.

அயல் நாடுகளிலுள்ளவர்களுடன் எவ்விதத் தொடர்பும் அற்றிருந்த மனிதன் இன்று அவர்களுடன் நேரடியாகப்பேசி அவர்களின் உருவங்கள் தாங்கிய படங்களையும் பார்க்கின்றான். வடதுருவப்பகுதியில் இருந்தாலும் சரி, தென் துருவப் பகுதியில் இருந்தாலும் சரி, கடலின் அடியில் இருந்தாலும் சரி, கடவுளின் உலகம் எனக்கருதப்பட்ட கோள்களில் இருந்தாலும் சரி அவர்களுடன் உடனுக்குடன் தொடர்பு கொள்ளக்கூடிய நிலையில் இருக்கும் மனிதன் இத்தொழில் நுட்பங்களை எவ்விதம் ஆரம்பித்தான் என்பதைச் சற்றுக் கவனிப்போம்.




இற்றைக்கு 7000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் வரை சாதாரண உபகரணங்கள் உடைகள் உறைவிடங்கள் என்பவற்றைத் தவிர சிறப்பாகக் கூறக் கூடியவாறான எவ்விதத் தொழில் நுட்பங்களும் இருந்ததாகத் தெரியவில்லை. அன்று மனித சமூகங்களுக்குப் புதிய விவசாய உபகரணங்கள், வீட்டு வசதிகள் அவற்றைத் தயாரிப்பதற்கான பொருட்கள் என்பன தேவைப்பட்டன.

காலஞ்சிறிது கடந்தபோது மனிதன் தனது தேவைகளைக் குறியாகவும், புத்திசாதுர்யத்தைத் துணையாகவும் கொண்டு புதிய உபகரணங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டான். இத் தயாரிப்புகளில் மிக முக்கியமானதும் அவசியமானதும் சக்கரங்களின் தயாரிப்பென்றே கூறலாம். அத்துடன் புவியின் மேற்பரப்பில் காணப்பட்ட சுத்திகரிக்கப்படாத உலோகத்தாதுப் பொருட்களைச் சூடாக்கி எவ்விதம் உலோகங்களைப் பெற முடியும் என்பதையும் அந்த உலோகங்கள் மூலம் தனக்குத் தேவையான உலோகப் பொருட்களை எவ்விதம் செய்யலாம் என்பதையும் கற்றறிந்தான்.

முன்னைய தொழில் நுட்பங்கள் பல மத்திய கிழக்கிலும் தூரகிழக்கிலுமே அபிவிருத்தியடைந்திருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. புதிய விஞ்ஞான நோக்கங்களுக்கான தேவாலய எதிர்ப்புக்களினால் 14ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பியர்கள் எவ்விதச் செயற்பாடுகளையும் ஆரம்பிக்கவில்லை எனவும் சொல்லப்படுகின்றது. எவ்வாறாயினும், அதன் பின்னர் அச்சுவேலைகள், சுரங்கத்தொழில்கள், பொருட்களைப் பதப்படுத்துதல், விஞ்ஞான உபகரணங்களின் தயாரிப்புக்கள் என்பன ஐரோப்பியரினால் விருத்தி செய்யப்பட்டதையும், அதிஉயர் தொழில்நுட்பப்பகுதியாக அது மாற்றமடைந்ததையும் நாம்அறிவோம்.

தொழில் புரட்சியின்போது சக்தியின் உருவாக்கலையும் கட்டுப்பாடுகளையும் கொண்ட தொழில் நுட்பம் இயந்திர ஆற்றல் படைத்தவைகளாக மாற்றமடைந்தன. நீராவி இயந்திரமும் அதன் பின்னர் வந்த உள்ளகத் தீயினால் இயங்கும் இயந்திரங்களும் உற்பத்தி, போக்குவரத்து, விவசாயம், பதப்படுத்தல் என்பவற்றுக்கு நம்பிக்கையான சக்தி மூலங்களை வழங்கின.

இன்று மின்சார ஒழுங்கு முறைகளினாலும் பின்னர் வந்த மின்னணு முறைகளினாலும் பாரிய தொழில் நுட்ப வளர்ச்சியை நாம் பெற்றுள்ளோம். இவ் வளர்ச்சிகளினால் தபால், தகவல் போக்குவரத்துக்கள், சிறிய சக்திவாய்ந்த கணனித்தயாரிப்புகள், விண்வெளிப் பயணங்கள், ஆழ்கடல் ஆய்வுகள் என்பவற்றில் வெற்றிகண்ட நாம் இந்த 20–ஆம் நூற்றாண்டில் புதிய தொழில் நுட்பப் புரட்சி ஒன்றை மேற்கொண்டுள்ளோம். இனி தொடரப்போகும் தொழில் நுட்பங்கள் எந்த நிலைக்கு வழிவகுக்குமென்பது விந்தையானது என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை.

(5ஆம் பக்கம் பார்க்க)

# -அறிவுலகம்-

சாந்தி கந்தையா
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

☐ *பெண்கள் நீண்டதூரம் சைக்கிள் ஓடுவதால் உடல்நிலை பாதிப்படையும் என்கிறார்கள் அது உண்மையா?*

பெண்களும், ஆண்களும் ஒரே உடலமைப்பை உடையவர்கள்தான். அப்படிப் பார்க்கப்போனால் நீண்டதூரம் தொடர்ச்சியாக சைக்கிள் ஓடுவது ஆண்களுக்குத்தான் பாதிப்பு அதிகம்... சாந்தி... நீங்கள் பயமில்லாமல் சைக்கிள் ஓடலாம்!... ஆனால் எதற்கும் ஒரு அளவு இருப்பது நல்லது அல்லவா?

எஸ். சந்திரா கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

☐ *தமிழீழ வான்பரப்பில் பறக்கும் ''சுப்பர் சோனிக்'' விமானம் உண்மையிலேயே ஒலியை விட வேகம்கூடியதா?*

ஆம்!... சாதாரணமாக வளியில் ஒலியின் வேகம் செக்கனுக்கு **330** மீற்றர். இவ்வேகமானது திண்மம், திரவம் என்பவற்றில் முறையே 8, 5 மடங்கு அதிகம். சுப்பர்சோனிக் வேகம் என்பது மணிக்கு **1216** கிலோ மீற்றரிலும் அதிகம். இந்த மிகையொலி வேகத்தை ''மாக்'' என்னும் அலகில் குறிப்பிடுவர். எந்த வேகமும் இன்று, புலியின் வீரத்தின் முன்னால் எல்லாமே பஸ்மம் தானே?

க. உஜிதன் யாழ்ப்பாணம்.

☐ *பெருகிவருகின்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மனிதனின் வளர்ச்சிக்கு உந்துதலாக அமையுமா? அலலது அவனுடைய அழிவிற்கு தூண்டுதலாக அமையுமா?*

இல்லை .. விஞ்ஞானத்தை மனிதனின் வளர்ச்சிக்கும் பயன்படுத்தலாம், அவன் அழிவுக்கும் பயன்படுத்தலாம். அதை உபயோகிக்கும் மனிதனின் மனோநிலையைப் பொறுத்ததே எல்லாம்...

இ. ரேவதி கைதடி வடக்கு.

☐ *சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைக்கு வழங்கப்படும் சிறுநீரகங்கள் எப்படி இருக்கவேண்டும்?*

இன்று மருத்துவத் துறையினர் வளர்ச்சி கண்டுள்ள மிகப்பெரிய முன்னேற்றம் உடல் உறுப்புக்களை மாற்றி அமைத்தல் (Transplant of organs) ஆகும். கண்ணின் விழிவெண்படலம், இதயம், சிறுநீரகம், நுரையீரல், கல்லீரல் போன்ற உறுப்புக்கள் மாற்றீடு செய்யப்படுகின்றன. இறுதிக்கட்ட சிறுநீரக நோய்களுக்கு சரியான சிகிச்சை சிறுநீரக மாற்று ஒன்றே. இதனை வழங்குவதற்கு இரத்த உரித்துடைய உறவினர்கள் அதிலும், இரட்டையர்கள் மிக ஏற்றவர்கள். ஏனெனில் அவர்கள் ஒரே எச்.எல்.ஏ. (Human Levcocyte Antigen) உள்ளவர்கள். மாற்றப்பட்ட உறுப்பிற்கு எதிரான அகத்தில் எதிர்ப்பு ஏற்படுவது குறைக்கப்படுகிறது. 76 ./. மாற்று சிறுநீரகங்கள் எவ்வித தடங்கலுமின்றி ஒரு வருடகாலம் செயற்படுகிறது.

## கேள்வி. பதில்

ஆனந்தி

அ. கல்யாணி
தொண்டைமானாறு, வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், வல்வெட்டித்துறை.

☐ *சிலருக்கு உணவு உட்கொண்டதும் தூக்கம் வருகின்றதே ஏன்?*

இது உடலின் குருதிச் சுற்றோட்டத்தில் தங்கியுள்ளது. குருதி, உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட விகிதத்திலேயே சென்று கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த விகிதமானது மாறுபடக்கூடியது. நாம் உணவு உட்கொண்டதும் இரைப்பையின் தொழிற்பாடு துரிதமடைவதால், அந்தப் பகுதிக்கு குருதி அதிகம் தேவைப்படுகின்றது. இதனால் மூளைக்குச் செல்லும் குருதியின் அளவு குறைவதால், மூளையின் செற்பாட்டுத் திறனும் குறைவடையும் இதுவே உணவுட்கொண்டதும் ''கம்மென்று'' ஒரு மந்த நிலை ஏற்படுகிறது. உணவு உட்கொண்டதும் தூக்கம் வருவதற்கும் இதுவே காரணமாகும். எனவே உணவு உட்கொண்டதும் குறிப்பாக மதிய உணவின் பின்னர் சிறு ஓய்வோ அல்லது ஒரு குட்டித் தூக்கமோ தேவை.

இ. மயூரன்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வெட்டித்துறை.

☐ *''கடல் கன்னி'' தோன்றுவதன் காரணம் என்ன? அவற்றை எங்கே பார்க்கலாம்?*

''கடல் கன்னி'' என்று இடுப்புக்கு மேலே மனிதப் பெண்ணுருவமும், கீழே மீனுருவமும் கொண்ட பெண்ணைத் தானே குறிப்பிடுகின்றீர்கள்? இதெல்லாம் வெறும் கட்டுக்கதை. பண்டைய இதிகாச, புராண, ஜாதகக் கதைகளில் தான் இவையெல்லாம் பிரமாதமாக மிகைப்படுத்தப்பட்டுள்ளன. அப்படியான ஒரு உயிரினம், அறிவியல் பூர்வமாக நிலைத்திருக்கமுடியாது.

# அரும்புகள்

— மாணவர் ஆக்கம் —

## தெரிந்து கொள்ளுங்கள்

இந்த ஆண்டு விம்பிள்டன் வீராங்கனை ''கான்சிடா மார்ட்டினஸ்'' என்ற 22 வயது பெண்மணி ஆகும். இவர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். அந் நாட்டிலிருந்து ஒரு பெண் இப் பெருமையை பெறுவது இதுவே முதல்தடவை.

உலகிலே மிளகாய் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது இந்தியா. இதற்கடுத்து சீனா, பாகிஸ் தானில் அதிகமாக விளைகிறது.

மிகப் பெரிய நகரம் — லண்டன்
மிகக் குளிரான இடம் — சைபீரியா
மிக வெப்பமான இடம் — லிபியா
உலகின் கூரை — திபெத்
அரபிக்கடல் இராணி — இந்தியா
இருண்ட கண்டம் — ஆபிரிக்கா.

பரமசிவம் பாலாஜி,
யாழ். இந்துக்கல்லூரி,
ஆண்டு 8 D.

## கிறிஸ்மஸ் கீதத்தின் தோற்றம்

ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் மாதம் 25ஆம் நாளன்று கிறிஸ்மஸ் நாள் வருகின்றது. அன்றைய நாள் தேவாலயங்களில் பாடப்படும் ''அமைதியான இரவு (Silent Night)'' எனும் உலகப் புகழ் பெற்ற கிறிஸ்மஸ் கீதம் 1818ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. ஒஸ்ரியா நாட்டில் ''செயிஸ் பேர்க்'' எனும் நகருக்கு அண்மையில் ஒலிபெண்டோவ் கிராமத்தில் இளங் குரவரான வண. யோசப் மோஹர் இக் கீதத்தை இயற்றி னார். குரவர் மோஹரின் நண்பரான ''பிரான்ஸ் குறுபர்'' என்பவர் சங்கீத ஞானமும், இசை ஞானமும் கொண்டவர். இவர் சொல் நயம் கொழிக்கும் இப் பாடலைப் பார்த்து வசீகரப் பட்டார் இந்த உந்துதலால் அன்றைய தினமே இசை அமைத்தும் விட்டார். 1818 டிசெம்பர் 24 அன்று பாடலாக்கம் செய்யப்பட்டபோது பிரான்ஸ் குறுபரின் ஓகன் பழுதாகிவிட்டதால் கிற்றார் இசையுடன் மட்டுமே பாடல் அரங் கேறியது.

உயிர்த்துடிப்பு நிறைந்த பாடல் வரிகளை யும், இசையையும் கொண்டிருந்ததால் இப் பாடல் குறுகிய காலத்திலேயே உலகத் திசையெங்கும் ஒலித்தது.

அயர்லாந்தைச் சேர்ந்த ''வண. ஸ்ரேபேர்ட் அகஸ்ரஸ் புறூக்ஸ்'' எனும் குரவரால் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் உல கின் மூலை முடுக்கெல்லாம் துரிதமாக பரவியது. அன்றும், இன்றும், என்றும் போற்றுதற்குரிய சாகாவரம்பெற்ற பாடலாகிவிட்டது.

செல்வன் வே. திருமாறன்
ஆண்டு 10 A,
யாழ். புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம்.

## உங்களுக்குத் தெரியுமா?

ஏழு குன்றுகளின் நகரம் — உரோம்
பூங்காவின் பட்டணம் — சிக்காக்கோ
கங்காருவின் நாடு — அவுஸ்திரேலியா
ஐந்து நதிகளின் நாடு — பஞ்சாப்
கேக்கின் நாடு — ஸ்கொட்லாந்து
ஆசியாவின் நோயாளி — பர்மா
ஐரோப்பாவின் நோயாளி — துருக்கி
உலகத்தின் புனிதபூமி — ஜெருசலேம்
உலகத்தின் சக்கரைக்கிண்ணம் — கியூபா
ஆயிரம் பொய்கையின் நாடு — பின்லாந்து
மஞ்சள் நதி — குவாங்கோ.

பிறேம்லதா பரமசிவம்,
ஆண்டு 10
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

## மாணவர்களே படிப்பதெல்லாம் ஞாபகத்தில் நிற்கவேண்டுமா?

மாணவர்களே நீங்கள் படிப்பதெல்லாம் நன்கு ஞாபகம் இருக்கவேண்டுமா? அனுப்பு பஞ்சியை பாராமல் 'எனக்கு இது வேண் டாம்' என ஒதுக்கி வைக்காமல் நாள் தோறும் அல்லது அடிக்கடி கரட் (Carrot) சாப்பிடுங்கள். அப்பிள் (Apple) பீச்சம் பழம் முந்திரிகைப்பழம் என்பனவும் கிடைக் கின்றபோதெல்லாம் சுத்தமாக்கிச்சாப்பிடுங் கள்.

ஏனெனில் மூளையில் ஞாபகசக்தி நன்றாக இருப்பதற்கு மூளை நல்ல நிலையில் செயற் படுவதற்கு ''போரோன் – BORON'' என் கின்ற கனியுப்பு மிகவும் அவசியமானது. இந்த போரோன் கரட்டிலும், பழங்களி லும் ஏராளமாக இருக்கின்றது.

போரோன் மூளையில் குறைகின்றபோது நித்திரை விழித்துப்படிப்பதெல்லாம் மறந்து விடும்.

எனவே இன்றிலிருந்து நாள்தோறும் கரட், முந்திரிகைப்பழம் மாறிமாறிச்சாப்பிடுங்கள். அல்லது அடிக்கடி சாப்பிடுங்கள். போரோ னைமூளைக்கும் உடல்முழுவதுக்கும் காவிச் செல்வதற்கு''நல்ல இரத்தம்'' அவசியம் நல்ல இரத்த உற்பத்திக்கு ''இரும்புச்சத்து'' (Iron) அவசியம். இந்த இரும்புச்சத்து வேண்டியளவு பொன்னாங்காணி, அகத்தி யிலை, முருங்கையிலை, முளைக்கீரை, தவசி முருங்கை, சண்டியிலை என்பவற்றில் இருக்கின்றது. எனவே நாள்தோறும் இதி லும் ஒன்றை உணவுடன் சாப்பிட மறவா தீர்கள்.

## தெறிப்பு

### ஆண்டு மலர்

சாளரம் மூன்றாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழை வாங்கியவுடன் வியப்பு மேலிட்டது. கவர்ச்சிகரமான அட்டையுடன் நல்ல பக்க அமைப்புடன் வெளிவந்த சாளரம் இவ்வாறே ஒவ்வொரு முறையும் வெளிவராதோ என்ற ஆசை எழுந்ததை சொல்லாமலிருக்க முடியவில்லை.

கதிர். சயேந்திரன், யாழ். இந்துக்கல்லூரி.

சாளரம் ஓகஸ்ட் – செப்ரெம்பர் இதழ்கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். கிட்டுமாமா பூங்கா பற்றிய சித்திரம் நன்றாக இருந்தது. நிலாமுற்றத்தில் கூறப்பட்டகருத்துக்கள் நன்றாக இருந்தன. கவிதைப் போட்டி ஒன்றையும் நடாத்தினால் சிறப்பாக இருக்கும்.

அ. சண்முகதாஸ், கோப்பாய் வடக்கு.

### கரம் உயர்த்தி வாழ்த்துகின்றேன்.

மாணவர் எம்மவர்க்கு மதியைத் தரும் இனியமுதே தேனாக எம்மனதில் சேர்ந்துவிட்ட திருவொளியே நீ செய்யும் நற்செயலை நீண்ட நாள் பாடவந்தேன், சாளரமே இன்றுனக்கு கரம் உயர்த்தி சங்கர் நான் வாழ்த்துகின்றேன்.

த. சங்கர், பலாலி.

### கவிதைப் பகுதியைக் கூட்டலாம்.

தங்களது சாளரம் எமது மூளைக்கு அரும் பெரும் விருந்தாக உள்ளது. சாளரத்தில் இடம் பெறும் பொது அறிவுப் போட்டி, கட்டுரைப் போட்டி என்பன மாணவர்களின் சிந்தனையைத் தூண்ட வல்லதாகவும், ஆங்கிலம் கற்போம், அறிவுலகம் போன்றவை மாணவர்களின் அறிவு வளர்ச்சியின் தூண்டுகோலாகவும் அமைகின்றது. சாளரம் கவிதைப் பகுதியை மேலும் ஒரு பக்கம் கூட்டலாம் என்பது எனது விருப்பம். சாளரம் நூலானது மாணவர்களாகிய எமக்குக்கிடைத்த ஒரு பெரும் புதையலாகும். சாளரத்தின்வளர்ச்சி குன்றிடாது புதுப் பொலிவுடன் திகழ எனது இதய பூர்வமான நல்வாழ்த்துக்கள்.

அன்புள்ள வாசகன் மௌ. மதுவர்மன், ஆண்டு 09A
மு/வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவளை.

### கல்வி வளர உதவுகிறது

மாணவியாகிய நான் சாளரத்தைப் படிப்பதால் மேன் மேலும் எனது கல்வியானது வளர்ச்சியடைந்து செல்கிறது. அதற்கு வழிவகுக்கும் சாளரமே நீ வாழ்க.

செல்வி. இ. புஸ்பம், ஸ்ரீ சோமாஸ் கந்தா கல்லூரி, புத்தூர்.

### மாதந் தோறும் வெளிவரவேண்டும்.

பொது அறிவுப்போட்டியில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இது குறித்து தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சகல துறைசார் அறிவும் நிரம்பப்பெற்றதாக சாளரம் அமைந்துள்ளது. மாதந்தோறும் ''சாளரம்'' வெளிவரக்கூடியதாக ஏற்பாடு செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

இ. நிசாந்தன், நல்லூர்.

### நீ பெரியவன்

சாளரமே – நீ வயதில் குறைந்தவன்தான் ஆனால் அறிவால் ஆற்றலை வெளிப்படுத்துவதில் பெரியவன் உள்ளத்தால் சொல்கிறேன். உறுதியான நோக்கத்தில் உன்னை வளர்த்திடு. ஏற்றி நிற்கிறது அறிவு உலகம். வாழ்த்த இருக்கிறது வருங்கால சந்ததியுமே.

ச. வானதி, புலோலியூர்.

அட்டை அசத்திவிட்டது.

சாளரத்தை வாங்கிப் பார்த்தபோது, அட்டையே அசத்திவிட்டதே! அற்புதமான ஈழத்துச் சோலையை படமாக்கி அறிவுச்சோலையின் அட்டையாக்கியமை அருமை! இன்றைய அரசியல் சம்பந்தப்பட்ட இருகட்டுரைகளிலும் நிலாமுற்றத்திலும் என்னை மறந்தேன். காலத்தின் தேவைக்கு தேவையான கட்டுரை ''நிலாமுற்றம்'' ''மருத்துவம்'' சார்ந்த கட்டுரைகள் நன்றாயிருந்தது. கிட்டுவின் பூங்காச்செய்தி படங்களுடன் வந்து, சாளரத்தின் தரத்தையே கூட்டியது. மாணவர் பக்கத்துக்கான கட்டுரை, மாணவராகிய எமக்கு பயனுள்ளதாயிற்று. சிறீபிரியா எழுதிய ''சிறையிலும் வாடாத கறுப்புமலர்'' என்ற கட்டுரையின் பெரும் பகுதி யாழ். இந்துவின் 1988–89 காலத்துக்குரிய ''இந்து இளைஞன்'' இதழில் வந்த கட்டுரையை ஒத்திருந்தது. அதே தலைப்பில் எழுதியதால், குட்டு இலகுவில் வெளியாகிவிட்டது. என்றாலும் சுயமாக முன்னேற, அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்! செய்திகள் நன்றாய் இருந்தன. விளையாட்டுச் செய்திப் பகுதி சுப்பர் இன்னும் பெருகவேண்டும் என்பது என் அவா. பூமி பற்றிய கட்டுரை உயர்ரகத்தினது. சர்வதேச. மொழியறிவைப் பெருக்கும் முயற்சிக்கு நன்றி. பெருகும் விளம்பரங்களை ஓரளவு கட்டுப்படுத்தி அவற்றை அறிவு வாசகங்களால் நிரப்பினால் நன்றாயிருக்குமே!

ஆதரவை அள்ளித்தரும் வாசகன் தாவை. சி. சோ. பதந்தன்.
யாழ். இந்துக்கல்லூரி.


புதுக்குடியிருப்பில்

**கந்தையா களஞ்சியம்**

புதுக்குடியிருப்பு மக்கள் தங்களுக்குத் தேவையான

**பலசரக்குப் பொருட்களையும் சைக்கிள் உதிரிப் பாகங்களையும்**

நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள தூர இடங்களுக்குச் செல்லத்தேவையில்லை.

**எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும்**

இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஞாபகம் வைத்திருங்கள்**

**கந்தையா விற்பனைக் களஞ்சியம்**

பிரதான வீதி, **புதுக்குடியிருப்பு.**

# விளையாட்டு

## பொது நலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள்

பொது நலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் முதன் முதலில் 1930 ஆம் ஆண்டில் ஆரம்பமாகின. இதன் 15 ஆம் விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் கனடாவின் விக்டோரியா என்னும் இடத்தில் இடம்பெற்றன. இந்த விளையாட்டுக்களின் போது அவுஸ்திரேலியா 87 தங்கப்பதக்கங்களையும் 52 வெள்ளிப்பதக்கங்களையும் 43 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று முதலாம் இடத்தை பெற்றுள்ளது. கனடா 40 தங்கப் பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தையும் 31 தங்கப் பதக்கங்களுடன் இங்கிலாந்து மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன, இங்கு இடம் பெற்ற விளையாட்டுகளில் 64 நாடுகளைச் சேர்ந்த 3250 வீர / வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

அதிகப் படியான தங்கப் பதக்கங்களை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இருவர் பெற்றுள்ளனர். அவுஸ்திரேலிய உடற்பயிற்சி வீரரான பிரன்னம் டௌறிக் 05 தங்கப் பதக்கங்களையும் கசுமித ரகாஹாசி இயற்கை இணைப்புகளுடனான உடற் பயிற்சிக்கு 05 தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கதி பிறீமன் 200, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளார்.

36 வருடங்களுக்குப் பின்னர் தென் ஆபிரிக்காவும் முதன் முறையாக இப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளது. 800 மீற்றர்களுக்கான வெள்ளிப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்ட கெகிகியஸ் செப்பேன்க் என்பவரே முதன் முதலில் சர்வதேச பரிசைப் பெற்ற கறுப்பு இனத் தென் ஆபிரிக்கர் ஆவார்.

1997 ஆம் ஆண்டில் ஹொங்கொங் சீனாவிடம் கையளிக்கப்படுவதற்கு முன்னரான இவ் இறுதி விளையாட்டில் ஹொங்கொங்கும் கலந்து கொண்டது.

1950 ஆம் ஆண்டில் கேர்டில்ஸ் விளையாட்டில் தங்கப் பதக்கத்தையும் 03 வெள்ளிப் பதக்கங்களையும் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வெற்றி கொண்டிருந்த இலங்கை தனது பெயர் மாற்றத்தின் பின்னர் (ஸ்ரீலங்கா) முதன் முறையாகத் தங்கப் பதக்கம் ஒன்றைத் தனதாக்கிக் கொண்டது.

இங்கிலாந்து மலேசியாவைத் தோற்கடித்து 5ஆவது தடவையாக பாட்மின்டன் விளையாட்டுகளுக்கான தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளது.

இதே வேளை இவ் விளையாட்டுகளில் போது ஹொங்கொங்கைச் சேர்ந்த 71 வயதான சுரிகுழல் துப்பாக்கிச் சூட்டு வீரர் பீற்றர் றல் என்பவரும் கலந்து கொண்டதாகத் தெரியவருகின்றது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கீரென் பேர்கின்ஸ் என்பவர் 1500 மீற்றர்களுக்கான நெஞ்சினால் நீந்தும் போட்டியில் உலக சாதனை யொன்றை நிகழ்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 1992 ஆம் ஆண்டில் ஒலிம்பிக் விளையாட்டுகளின் போது சாதனை படைத்த இவர் இத்தூரத்தை 14 நிமிடங்கள் 41 . 66 வினாடிகளில் நீந்தி தனது முன்னைய சாதனையிலும் 1நிமிடம் 82 வினாடிகளுக்கு குறைவான நேரத்தில் கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 800 மீற்றர் நீச்சலுக்கான சாதனையையும் இவர் நிலை நாட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

---

● இரு சிறுவர்கள் தமது புத்திக்கூர்மையைப் பற்றி உரையாற்றிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு சிறுவன் மற்றவனைப் பார்த்து "நான் எட்டுமாதமாக இருக்கும்போது நடக்கக் கூடியவனாக இருந்தேன்" எனக்கூறினான், அதற்கு மற்றச்சிறுவன், இதைப் புத்திக்கூர்மை என்றா சொல்வது? "நான் அந்த நேரம் மற்றவர்களைக் கொண்டு என்னைத் தூக்கும்படி செய்தேன்" என்றான்.

---

கேள்வி: ஒரு விமானம் அமைதியற்றிருக்கப் போகின்றது என்பதை எவ்வாறு உன்னால் சொல்லமுடியும் ?

பதில்:- விமானப் பணிப்பெண் அங்குள்ளவர்களுக்குக் கோப்பியை வழங்கும் போது.

பொதுநலவாய நாட்டு விளையாட்டுப் போட்டிகளின்போது தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்ற நாடுகளின் விபரம்:

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 87 | 52 | 43 | 182 |
| கனடா | 40 | 42 | 46 | 125 |
| இங்கிலாந்து | 31 | 45 | 49 | 125 |
| நைஜீரியா | 11 | 13 | 13 | 37 |
| கென்யா | 07 | 04 | 08 | 19 |
| இந்தியா | 06 | 11 | 07 | 24 |
| வேல்ஸ் | 05 | 08 | 06 | 19 |
| ஸ்கொட்லாந்து | 06 | 03 | 11 | 20 |
| வட அயர்லாந்து | 05 | 02 | 03 | 10 |
| நியூசிலன்ட் | 05 | 16 | 20 | 41 |
| நௌறு | 03 | 00 | 00 | 03 |
| தென்ஆபிரிக்கா | 02 | 04 | 05 | 11 |
| ஜமெய்க்கா | 02 | 04 | 02 | 08 |
| மலேசியா | 02 | 03 | 02 | 07 |
| ஸ்ரீலங்கா | 02 | 01 | 02 | 05 |
| சம்பியா | 01 | 02 | 00 | 03 |
| நமீபியா | 01 | 01 | 02 | 04 |
| சிம்பாவே | 01 | 00 | 01 | 02 |
| பப்புவா நியூகினியா | 00 | 03 | 03 | 06 |
| மேற்கு சமாவோ | 00 | 01 | 00 | 01 |
| பாகிஸ்தான் | 00 | 01 | 00 | 01 |
| ஹொங்கொங் | 00 | 00 | 03 | 03 |
| ரிறினிடாட் ருபாக்கோ | 00 | 00 | 04 | 04 |
| உகண்டா | 00 | 00 | 02 | 02 |
| பேர்முடா | 00 | 00 | 02 | 02 |
| கேர்ன்சி | 00 | 00 | 01 | 01 |
| தன்சானியா | 00 | 00 | 01 | 01 |
| பொட்ஸ்வானா | 00 | 00 | 01 | 01 |
| கானா | 00 | 00 | 01 | 01 |
| நோர்போக் தீவு | 00 | 00 | 01 | 01 |
| சேசெல்ஸ் | 00 | 00 | 01 | 01 |
| ரொங்கா | 00 | 00 | 01 | 01 |

## தங்கப்பதக்கத்தைப் பெற்றார்



10-09-1994 அன்று நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக 14 வது பட்டமளிப்பு விழாவில் திரு. ஜோசப் சந்தியோ மைக்கல் கொலின்ஸ் என்பவர் அமரர் பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

கலைப்பீடத்தின் அதிசிறந்த பல்துறை (கல்வி – கலை – விளையாட்டு) தேர்ச்சிபெற்ற மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டு ஒரு தங்கப்பதக்கத்தையும் பல்கலைக்கழக ரீதியில் அனைத்துப் பீடங்களிலும் பல்துறைத் தேர்ச்சி பெற்ற மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டு இன்னோர் தங்கப்பதக்கத்தையும் இவர் பெற்றுக் கொண்டார்.

நாவாந்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஆரம்பக் கல்வியை நாவாந்துறை றோ. க. பாடசாலையிலும் உயர் கல்வியை யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும் கொழும்புத்துறை அ.ம.தி. பயிற்சிக் கல்லூரியிலும் கற்று, யாழ் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ நாகரீக சிறப்புக்கலை மாணிபாகப்பட்டம் பெற்ற இவர், கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அடிகளாரது மாணவராவார். யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு புதிய உயர்கல்லூரிப்பட்டப்படிப்புக்கள் பிரிவு என்பனவற்றின் விரிவுரையாளராகிய இவர் பல ஒலிப்பதிவு நாடாக்களில் பாடல்களை இயற்றிப்பாடியவரும் பல்கலைக்கழக நாட்டார் வழக்கியற்கழக நாடக நடிகரும், புகழ்பெற்ற சென்மேரிஸ் உதைபந்தாட்ட அணியின் (கப்டன்) தலைவரும் ஆவார்.



# சிறுவர்போசாக்கு பூங்கா விளையாட்டு விழா

யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்காக்களில் வதியும் 1200 இளஞ்சிறார்களின் விளையாட்டு விழா 19-10-94 அன்று யாழ் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

சின்னஞ்சிறிய மொட்டுகளாம் சிறுவர்கள் தமது அழகுநடை காட்டி, ஆற்றலைக்காட்டி அறிவைக் காட்டிப் பார்வையாளரைப் பரவசமூட்டினார்கள். இவ்விழாவை ஏற்பாடுசெய்த தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதி அவர்களிடம் இவ் விழாவின் முக்கியத்துவம் பற்றிக் கேட்டபோது அவர் சொன்னார், ''போர் அனர்த்தங்களால் வாடும் 3 — 5 வயதுக்குட்பட்ட சிறார்களை அழைத்து அவர்களுக்குப் போஷாக்கான உணவூட்டி உடை வழங்கி, கல்வி, வைத்திய சேவைகளை வழங்கி வருகிறோம். தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் எண்ணத்தில் உதித்த இத்திட்டத்தினால் 1200 சிறுவர்கள் பயனடைந்துவருகிறார்கள். இவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஒன்று உடற் கல்வியாகும். அவர்கள் இக் கல்விமூலம் உடலையும், உள்ளத்தையும் ஆளக் கற்றுக்கொள்கிறார்கள். இசையுடன் ஒத்திசைவு பெறக் கற்றுக்கொள்கிறார்கள். இவர்களின் ஆற்றலை வளர்ப்பதற்கும், சிறுவரிடம் அபிவிருத்தி செய்யப்படும் மனப்பண்புகளையும் விருத்தி செய்யவும் விளையாட்டு விழாக்கள் பெரிதும் உதவுகின்றன எனும் அடிப்படையில் இவ் விழாவை ஏற்பாடு செய்துள்ளோம்'' என்றார்.

கடந்த ஒரு வருடமாக வளர்த்தெடுக்கப்பட்ட இவ்விளஞ் சிறுவர்களின் விளையாட்டு விழாவைப் பார்த்த எவரும் அன்றைய பொழுதை பயனுள்ள இனிய பொழுதாகவே கழித்திருப்பர். ஓட்டம், பாய்தல், பந்து எறிதல், கொடி அஞ்சலோட்டம், நத்தை ஓட்டம், தவளை, தாரா நடைகள் எனப் பல்வேறு விளையாட்டுக்கள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. விளையாட்டு நிகழ்ச்சிகளை கல்வித் திணைக்கள அலுவலர்களும், ஆர்வலரும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்ச்சியின் இடைவேளையின்போது காஷ்மீரத்தில் குங்குமப்பூ மலர்ந்ததுபோல நீலமும், இளநீலமும் கலந்த ஆடைகளை அணிந்தவாறு 216 சிறுவர்கள் மைதானத்தின் மத்தியில் வந்து தமது கைகளில் உள்ள மலர்ச்செண்டுகளை இசைக்கேற்ப அசைத்தவாறு உடற்பயிற்சியிலீடுபட்டனர். இக் காட்சியைப்பார்த்த எல்லோர் வாயும், மனமும், புளகாங்கிதமடைந்த நிலையிலேயேயிருந்தது. அத்துணை சிறப்பாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

அடுத்த நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வினோத உடைப்போட்டியில் ஆமை, ஏதிலிகள் குடும்பம், முதலுதவிக் குழு, பனைமரம், மரங்களைக் காப்போம் இவைபோன்ற பல்வேறு வேடங்களைத் தாங்கிய வண்ணம் சிறுவர்கள்





அரங்கைவலம் வந்தார்கள். தீர்ப்பு வழங்கும் நடுவர் களை திணறடிப்பதுபோல ஒவ்வொரு நிகழ்ச்சியும் அமைந்திருந்தது.

இவ் விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த தமிழ்ச்செல்வன் அவர்கள் பேசும்போது; தமிழீழத்தில் போராட்ட சூழலினால் எந்த ஒரு சிறுவருமே பாதிப்படை யாது அவர்களின் ஆற்றல்கள் வளர்த்தெடுக்கப் படவேண்டும் எனும் தேசியத் தலைவரின் உன்னத இலட்சியம் நிறைவேறுவதையிட்டு தான் மகிழ் வதாகக் கூறினார். சிறுவர் போட்டிக்கும் - பரா மரிப்புத் திட்டத்துக்கும் விளையாட்டு விழாவை நிறைவாக்கிய ஆசிரியர்கள், பொறுப்பாளர்கள் ஏனைய எல்லாவித ஒத்துழைப்பையும் வழங்கிய பொது நிறுவனங்களையும் தனிப்பட்டவர்களை யும் பாராட்டுவதாகக் கூறினார். சான்றிதழ்கள், பரிசுகள் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கும் நல்ல தோர் விழாவைப் பார்த்த அனுபவத்துடன் வீடு திரும்பினோம்.

*சுப்பிரமணியம்,*
பிரதிக் கல்விப்பணிப்பாளர்.


## விக்னேஸ்வரா புடவை மாளிகை

காலத்திற்கேற்ற வகையிலான கண்கவர் புடவை வகைகள்
மற்றும் அழகுசாதனப் பொருட்கள் அனைத்தையும்
ஒரே இடத்தில் நியாயமான விலையில் கொள்வனவு செய்ய
புதுக்குடியிருப்பில் எம்மிடம் வாருங்கள்!

# விக்னேஸ்வரா புடவைமாளிகை

பிரதானவீதி, புதுக்குடியிருப்பு

# பொன்னம்பலம்
# அரிசி ஆலை

உங்கள் நெல்லை

பதமான முறையில்

உடைத்து, தீட்டிப் பெற்றுக்கொள்ள

**மருதனாமடத்தில் நம்பிக்கை நாணயம் மிக்க**

**அரிசி ஆலை**

## பொன்னம்பலம் அரிசி ஆலை

யாழ். வீதி,

**மருதனாமடம்.**

# பகலவன்

த. விஜயசாந்தி,
பலாலி.

கே: மனிதன் பிறந்தது வாழ்வதற்கென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் சிலர் சாவதற்குஆசைப்படுகிறார்களே. ஏன் என்று கூற முடியுமா?

ப: மனிதன் சாவான் மனித சமூகம் சாகாது. மனிதசமூகத்தின் நல்வாழ்விற்காக சிலர் தம்மை அர்ப்பணிக்கின்ற போது அச்சாவு மிக உன்னதமாகின்றது.

சா. சாந்தரூபி
கோப்பாய் வடக்கு.

கே: தேசவிரோதிகள் பற்றி உங்கள் கருத்து?

ப: புல்லுருவிகள்!

சுகந்தி குணரத்தினம்
யா/சுண்டிக்குளி ம. கல்லூரி

கே: ஜனாதிபதி தேர்தல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் சந்திரிகா தான் வெற்றிபெறுவார் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. எந்தவொரு தேர்தலும் தமிழருக்கு 'தேறுதலை' ஏற்படுத்தும் என எதிர்பார்க்க முடியாமலுள்ளது.

ப. கலாகரன்
அரியாலை.

கே. சந்திரிகா அரசு பாண்விலையைக் குறைத்திருப்பதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: 'அம்மா' முன்னர் பாணுக்கு நீண்ட வரிசைகளை ஏற்படுத்தி மக்களை துன்பப்படுத்தினார்.

'மகள்' இப்போது பாண் விலையைக் குறைத்து சந்தோசப்படுத்தியிருக்கிறார்.

க. ரஜனி
சாவகச்சேரி.

கே: இனப்பிரச்சினை நியாயமானமுறையில் தீர்த்துவைக்கப்பட்டால் சிங்களப் பேரினவாதிகள் ஆத்திரப்பட்டு குழப்பம் விளைவிக்கமாட்டார்களா?

ப: பேரினவாத வெறியர்கள் நிச்சயம் ஆத்திரப்படுவார்கள். இன்னொரு பக்கம் வெளிநாடுகளில் சுகபோகம் அனுபவிக்கும் நம்மவர்கள் மிகவும் கவலைப்படுவார்கள். அது ஒருபுறமிருக்க பொருளாதாரத்தடை தளர்த்தப்பட்டது என்ற அறிவிப்பு வந்தவுடன் நமது வியாபாரிகள் பலர் அழுவதைக் கவனித்தீர்களா?

எஸ். அறிஉலகன்
மானிப்பாய்.

கே: இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகளின்போது திரு. தொண்டமானின் முன்னைய தீர்வுத்திட்டம் பரிசீலிக்கப்படுமா?

ப: அது குறித்து தெரியவில்லை. தொண்டமான் இப்போது தனது சொந்தப் பிரச்சினைக்கு தீர்வு நாடி அலைவது தெரிகிறது. தமிழர் பிரச்சினை குறித்து அக்கறை காட்டுவதாகக் கூறிக்கொண்ட இவர், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெளிப்படையாகவே இனவாதத்தைக் கக்கிய ஐ. தே. க. வுக்கு ஆதரவளித்தமையானது, தமிழர் மத்தியில் அவர் மீதான சந்தேகத்தை ஏற்ப

# பதில்கள்

டுத்தியுள்ளது. தனிப்பட்ட நலன்களுக்காகப் பேரம் பேசுகிற அரசியல் வாதியாகவே இவர் தென்படுகிறார். 'அரசியலில் நண்பனும் இல்லை பகைவனும் இல்லை' என அடிக்கடி கூறும் இவரது அரசியலில் உண்மையும் இல்லை நேர்மையும் இல்லை, என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

அப்புத்துரை சண்முகதாஸ்
கோப்பாய் வடக்கு.

கே. தமிழீழ கனவுடன் ஆயிரமாயிரம் போராளிகளும், மக்களும் கல்லறைகளில் துயில் கொள்ளும்போது அதற்கு மாற்றீடாக எந்தவொரு தீர்வுத்திட்டத்தையும் நாம் ஏற்கலாமா?

ப. அவர்களின் கனவுகளை நனவாக்கக்கூடிய ஒரு மாற்றுத் தீர்வுத் திட்டத்தை மட்டுமே பரிசீலனை செய்யலாம்.

கு. நிசாந்தன்
கரவெட்டி.

கே. புதிய அரசு சமாதானம் பேசுகிறது, படைகளோ சண்டைக்கு நிற்கிறது. இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப. சமாதானம் பேசும் அரசுடன் நாமும் நேசக்கரம் நீட்டி அழைத்துப் பேசுகிறோம். அதேநேரம் சண்டைக்கு வரும் படையோடு எதிர்த்து சண்டையும் பிடிக்கிறோம். இன்றைய சூழ்நிலையில் இவ்விரண்டு அணுகுமுறைகளையும் கைக்கொள்ளும் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு சரியானது என்றே கருதலாம். இது புதிய அரசுத்தலைமைக்கும் புரியும்.

இவ்வளவு காலமும் முப்படைகளின் சகல வளங்களையும் பயன்படுத்திப் போரிட்டு வெற்றிகாண முடியாமல் போன படையினரின் இப்போதைய 'துணிச்சல்' வேடிக்கையானதே. இச்செயலானது – இரண்டு மூன்றுபேர் இழுத்துப் பிடித்துக்கொள்ள, விடு விடு ஒரு கைபார்க்கிறேன், என குதித்து அட்டகாசம் செய்யும் சில ஊர்ச்சண்டியர்களை ஞாபகப் படுத்துகிறது.

# ஆங்கிலம் கற்போம் -08-

## "The Heroes' House of Sleep" மாவீரர்கள் துயிலும் இல்லம்

| | | | |
|---|---|---|---|
| **Bala :** | Good afternoon, Selvan. What brings you here? | பாலா :- | மதிய வணக்கம் செல்வன். என்ன இந்தப் பக்கம்? |
| **Selvan :** | I've come to have a chat with you. But you seem to be in a very pensive mood! | செல்வன் :- | உம்முடன் கதைத்துவிட்டுப் போக வந்தேன் ஆனால் நீர் அதிக சிந்தனையில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. |
| **Bala :** | I'm anxious about my parents. They left this morning to visit my elder brother's grave at the Heroes' cemetery. He died a year ago today in the battle at Pooneryn. | பாலா :- | எனது பெற்றோரைப் பற்றித்தான் அங்கலாய்ப்பு. அவர்கள் மாவீரர் சேமக்காலையிலுள்ள எனது மூத்த சகோதரனின் கல்லறையைத் தரிசிப்பதற்கென காலையில் சென்றனர். பூநகரிச் சண்டையில் அவர் இறந்து இன்று ஒருவருடமாகிறது. |
| **Selvan :** | Where is the cemetery? | செல்வன் :- | சேமக்காலை எங்கிருக்கிறது? |
| **Bala :** | It's at Kopay on Raja Veethy. It's called "Maveerar Thuyilum Illam." We have several such resting places all over Tamil Eelam. | பாலா :- | அது கோப்பாயில் ராஜ வீதியில் உள்ளது. ''மாவீரர் துயிலும் இல்லம்'' என்று அது அழைக்கப்படுகிறது. தமிழீழமெங்கும் அப்படிப்பட்ட பல இளைப்பாறும் இடங்கள் உள்ளன. |
| **Selvan :** | Why is it called "Thuyilum Illam"? | செல்வன் :- | ''துயிலும் இல்லம்'' என்று ஏன் அதை அழைக்கின்றனர்? |
| **Bala :** | The word cemetery in English comes from the Greek word 'koimao' which means "put to sleep." That's why the burial ground is very aptly called "The House of Sleep." | பாலா :- | சேமக்காலை (Cemetery) என்ற ஆங்கிலப் பதம் Koimao என்னும் கிரேக்க சொல்லிலிருந்து வருகிறது. Koimao என்றால் துயிலடையச் செய்தல் என அர்த்தமாகும். எனவேதான் அடக்கம் செய்யும் பூமியை துயிலும் இல்லம் என்று மிகவும் பொருத்தமாக அழைக்கின்றனர். |
| **Selvan :** | I must visit one of these final resting places and pay homage to those who have selflessly sacrificed their lives for the liberation of our home - land. | செல்வன் :- | இந்த இறுதி இளைப்பாற்றிடங்களில் ஒன்றை நான் தரிசித்து எங்கள் தாயகத்தில் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை தன்னலமின்றி பலியாக்கியவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும். |
| **Bala :** | It's a sacred and hallowed place that everyone should visit. A visit to such a place will certainly be a source of inspiration to all of us. | பாலா :- | அது ஓர் பரிசுத்தமும் புனிதமுமான இடம். அதை ஒவ்வொருவரும் தரிசிக்க வேண்டும். அப்படியான ஓர் இடத்தைத் தரிசிப்பது நிச்சயமாக நம் உணர்வுகளைத் தூண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **Selvan** : | Do you go there often? | — | செல்வன் :- | நீர் அங்கு பலதடவை போவதுண்டா? |
| **Bala** : | Yes, I often go there. The graves are very neatly laid out and each tombstone has the name of the freedom fighter inscribed on it. The atmosphere there is very calm and serene. I sit there and reflect on the great courage, the thirst for freedom and the deep love these fallen heroes had for their home-land. | — | பாலா :- | ஆம் அங்குநான்பலதடவைபோவேன். கல்லறைகள் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சமாதிக் கல்லிலும் சுதந்திரப் போராளிகளின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அச் சூழல் மிகவும் அமைதியும் சாந்தமுமானது. மடிந்த மாவீரர் கொண்டிருந்த பெருந்துணிச்சல், சுதந்திரத்தாகம், தங்களது தாயகத்தின் மட்டிலான ஆழமான பற்றுப் பற்றி நான் அங்கு உட்கார்ந்திருந்து சிந்திப்பேன். |
| **Selvan** : | It's good that we have these lasting monuments. | — | செல்வன் :- | அவ்வகையான நிலையான நினைவுச் சின்னங்கள் இருப்பது நன்று. |
| **Bala** : | Yes, the mortal remains of these men and women are like seeds planted in the earth. They sprout forth with new vitality, inspiring us to follow in their footsteps. | — | பாலா :- | ஆம், இவ் ஆண், பெண்களின் பூதவுடல்கள் பூமியில் விதைக்கப்படும் வித்துகளைப் போலானவை. தங்களது அடிச்சுவட்டைப் பின்பற்ற அவை புதிய உயிராற்றலுடன் தளிர் விட்டெழும். |
| **Selvan** : | Bala, your parents are returning. They look very tired. | — | செல்வன் :- | பாலா, உம்முடைய பெற்றோர் திரும்பி வருகிறார்கள். அவர்களில் களைப்புத் தோன்றுகிறது. |
| **Bala** : | Mother, you have been a longtime out. Was there any problem? | — | பாலா :- | அம்மா நீங்கள் அதிக நேரம் நின்றுவிட்டு வந்திருக்கிறீர்கள், ஏதேனும் பிரச்சனையா? |
| **Father** : | While we were visting your brother's grave, another freedom fighter was being laid to rest. It was a very solemn and touching ceremony with full military honours. | — | தகப்பன் :- | நாங்கள் உன் சகோதரனது கல்லறையை தரிசித்துக் கொண்டிருக்கும் பொழுது, இன்னுமோர் சுதந்திரப் போராளி அடக்கம் செய்யப்பட்டார். முழு இராணுவ மரியாதையுடன் இடம் பெற்ற இச்சடங்கு மிகவும் சிறப்பமைதி வாய்ந்ததும் உளங்கனிந்ததுமாய் அமைந்தது. |
| **Mother** : | We took this opportunity to pay our respects to the martyr and offer our condolences to the bereaved family. | — | தாய் :- | இத்தியாகிக்கு எங்கள் மரியாதையைச் செலுத்தவும் அவரின் பிரிவாற்றாமையினால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தை தெரிவிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன் படுத்தினோம். |

# பொது அறிவுப் போட்டி - 7

01) யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் காலஞ்சென்ற பேராசிரியர் அ. துரைராஜா அவர்கள் பிறந்த ஆண்டு –

1. 1928  2. 1934  3. 1936

02) நுண்ணுயிர்கள் எமது உடலுக்குள் புகுவதைத் தடுக்கும் முதல் அரண் எனப்படுவது –

1. கண்கள்  2. வாய்  3. தோல்

03) பரம்பரை அலகுகளைக் (Genes) கொண்டுள்ள டி. என். ஏ. (D. N. A) என்ற பதார்த்தத்தைக் கண்டுபிடித்த பிரெட்ரிக் மிஷெர் (Fredric Misher) என்ற விஞ்ஞானி –

1. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்
2. சுவிற்சலாந்தைச் சேர்ந்தவர்
3. ரஷ்யாவைச் சேர்ந்தவர்

05) 1895 ஆம் ஆண்டு வில்லியம் மோகன் என்பவரால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட விளையாட்டு –

1. மரதன் ஓட்டம்
2. வலைப்பந்தாட்டம்
3. கரப்பந்தாட்டம்

06) சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகாவின் கணவர் திரு.விஜேயகுமாரணதுங்கா இவர்களால் கொலை செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது–

1. இலங்கை இராணுவத்தினரால்
2. ஜே. வி. பி இனரால்
3. இந்திய இராணுவத்தினரால்

07) தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவினுடைய மனைவியின் பெயர் –

1. வின்னி .2 ஹெலன் 3. ரோஸி

08) இரண்டாவது உலகப்போரின்போது அமெரிக்காவின் குண்டு வீச்சினால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடு –

1. பிரான்ஸ் 2. இந்தியா 3. ஜப்பான்

08) மனிதனை சில சமயங்களில் கடலில் ஆபத்திலிருந்து காப்பாற்றும் ஒரு மீனினம் –

1. டொல்பின் 2. திமிங்கிலம் 3. சுறா

## ஓகஸ்ட் செப்ரெம்பர் பொது அறிவுப்போட்டி 6 க்கான விடைகள்

01 உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நான்கு ஆண்டுகளுக்கொரு தடவை நடைபெறுகின்றது.

02) சூமேக்கர் லெவி (Shoe Maker Levy) வால் நட்சத்திரம் பல துண்டுகளாகி வியாழக் கிரகத்தின் மீது மோதியது. அதன் முதல் துண்டு மோதிய நாள் 1994 யூலை 16 ம் நாள்.

03) தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் பாடசாலை மாணவனாக இருந்த இளம்வயதில் தமது ஊரைச்சார்ந்த தமிழாசிரியர் ஒருவர் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்ற எண்ணத்தை தன்னுள் ஏற்படுத்தியதாக பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அந்த ஆசிரியரின் பெயர் திரு. வேணுகோபால்.

04) 'மருத்துவத்தின் தந்தை' எனப் போற்றப்படுகின்ற அறிஞர் ஹிப்போகிறட்டீஸ்.

05) 1959 ஆம் ஆண்டில் நடைபெற்ற புரட்சியின் விளைவாக கியூபா இந்த ஆண்டில் தனி நாடாகியது. 1961.

06) ருவாண்டாவில் பெரும்பான்மை இனத்தவர் ஹூட்டு (Hutu) இனத்தவர்.

07) ருவாண்டாவின் தலைநகர் கிகாலி.

08) அணுவின் கழிவானாலும் அதில் கதிரியக்கம் இருந்து கொண்டுதானிருக்கும். அது முற்றாகச் செயலிழக்க இத்தனை ஆண்டுகளாகும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 2000 ஆண்டுகள்.

சரியான விடைகளைத் தெரிவுசெய்து எழுதியனுப்பியுள்ள நூற்றுக்கணக்கான வாசகர்களுள் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலிகளாக தெரிவு செய்யப்பட்டோர் பின்வருமாறு –

### முதலாம் பரிசுக்குரியவர்

இ. அபிராமி
சுதாமுகாம்,
அறிவொளி வீதி,
கண்டுக்குளி.

### இரண்டாம் பரிசுக்குரியவர்

இ. மதுசங்கர்
மே/பா எஸ். கந்தசாமி
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

### மூன்றாம் பரிசுக்குரியவர்

கு. சுகுணன்
ஆண்டு 11
யா/ இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

இவர்களுக்கு சாளரம் வழங்கும் பணப் பரிசில்கள் முறையே 250 ரூபா, 150 ரூபா, 100 ரூபா வழங்கப்படும். இவற்றினை சாளரம் அறிவுலகத்தில் சனிக்கிழமைகளில் பகல் 12 மணிக்கு முன்பதாக நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

**நினைத்தாலே இனிக்கும்!**

- சுவையான ஐஸ்கிறீம் வகைகள்
- குளிர்பானங்கள்
- சிற்றுண்டி வகைகள்

இவற்றிற்கு யாழ் நகரில் பிரபல்யம் வாய்ந்த ஸ்தாபனம்

# கல்யாணி கிறீம் ஹவுஸ்



உங்கள் குழந்தைகளை
குதூகலத்தில் ஆழ்த்த-

நண்பர்களை மகிழ்விக்க -

இனிமையான நேரங்களை
இனிதே பகிர்ந்துகொள்ள-

கல்யாணி கிறீம் ஹவுசுக்கு
வாருங்கள்

## கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, சந்தோசம் வீதி,
யாழ்ப்பாணம்.

S. V. M.
S. V. M.
S. V. M.

ஆம், இது உங்கள்
நினைவில் நிற்கும் பெயர்

சமையலுக்கு சுவையூட்டும்

- மரக்கறி எண்ணெய் வகைகள்
- பால்மா வகைகள்
- பல்வித அத்தியாவசியப் பொருட்கள்

S. Mahalingham
DEPUTY PRINCIPAL

★ மலிவுவிற்பனை
மொத்த, சில்லறை
விற்பனையாளர்

S. Mahalingham
DEPUTY PRINCIPAL

சிற்றி ஏஜென்சி

சீ. வி. முருகேசு (S. V. M)
58, அருச்சுனாசாலை,
யாழ்ப்பாணம்.

J/SRI GNANA...
KOKU...